சகோதர சகோதரிகளே! மேல்நாட்டாரைச் சேர்ந்தொழுகி அவர்களிடத்தினின்றும் அநேக கொடுஞ் செய்கைகளைக் கைக்கொண்டு அவையே ஐரோப்பியர் கையாடும் முறைகளில் மிகவும் அத்தியாவசியமானவையும், சிறந்தவையும் என எண்ணி அநேக இந்திய சகோதரர்கள் ஏமாந்து பின்பற்றி வருகின்றனர். அந்தோ! அவர்கள் அதனை ஊன்றி யோசிப்பார்களாகில் அறிவுள்ளோர் அப்பொழுதே அகற்றிவிடுவார். அவை என்னெனிற் கூறுதும்:—நம்மிந்திய மக்களுக்கு வைதிக லௌகிக கிரிகாதி விஷயங்களுக்குச் சிகை அத்தியாவசியம் வேண்டியதிருக்க, அதனை முற்றிலும் கைவிட்டு ஷோக்காயிருக்கவேண்டுமெனக் கருதி ஷேக் வைத்துக்கொள்ளுகின்றனர். குளிரும் பனியும் நிறைந்த அந்நாட்டிற்கு அமைந்த உடைகளை உஷ்ணம் நிறைந்த இந்நாட்டினர் தரித்துக்கொண்டு அரைத் துரையாகி விடுகிறார்கள். இதனால் உஷ்ணம் அதிகரித்துப் பலவிதப் பிணிகள் ஏற்படுகின்றன. இம்மட்டோ! இன்னும் ஹுக்கா, சிகரட், பீடி முதலியவை உறிஞ்சுதல், மதுபானம் செய்தல் முதலியவைகளாம். இவற்றால் க்ஷயம் முதலிய நுரையீரல் சம்பந்தமான வியாதிகளும், புத்தி சுவாதீனமின்றித் திரிவதால் மதிப்புக் குறைதல், மூளைக்கொதிப்பு முதலிய பலவித கெடுதல்களும் உண்டாகின்றன. இவையன்றித் தாய்பாஷையைக் கைவிட்டன்னியபாஷையைக் கைக்கொண்டு தமிழ்வார்த்தை சரியாய் வாயில் நுழையவில்லை என்கின்றனர். அந்தோ! இம்மாதிரி தாய்நாட்டின் கொள்கைகளுக்கு மாறாக நடப்பதால் மாதுர்துரோகம் என்பதை கிஞ்சித்தும் நினையாது நாகரிகம் நாகரிகம் எனக் கையாடி வருகின்றனரே, இதுவோ நாகரிகம். இந்நாகரிகத்தை முற்றிலும் மறந்து ஆன்றோரின் கொள்கைகளை

அனுசரித்து நடப்பதோடு, ஆங்கிலேயர்பாலுள்ள அரிய குணங்களையும் கைப்பற்றி நடப்பதே நன்மையாம். அங்ஙனமின்றி இவர்கள் இவ்வாறு நடப்பது எவ்விதமிருக்கிறதெனின் நல்ல வஸ்துக்களையெல்லாம் கீழே இறக்கிவிட்டுப் பூச்சி, புழு, சக்கை முதலியவைகளைச் சேகரித்து வைத்துக் கொள்ளும் பன்னாடையை ஒத்திருக்கிறது.

இவ்வியாசத்தைக் கண்ணுறும் கனவான்கள் இங்கிலீஷ்காரரிடத்திலிருக்கும் அரிய குணங்கள் யாவை என வினவக்கூடும். அதனைச் செப்புதும்:—தாய்ப்பாஷையின்மீதும், தாய்நாட்டின்மீதும் அபிமானமுடைத்தாயிருத்தல், தம் நாட்டினர் அனைவரையும் சகோதரராகப் பாவித்தல், எத்தொழிலை ஆரம்பிக்கினும் ஊக்கத்துடன் முயலுதல், எத்தொழிலிலும் ஐக்கியமாயிருத்தல் முதலியவைகளாம்.

நேயர்களே! அந்நாட்டினர்பாலுள்ள பிற்கூறிய விஷயங்களைக் கைப்பற்றி நாமும் நடப்போமாகில் இவ்விந்தியாவானது தரித்திரர்களைத் தரித்திரமாக அடைந்து எங்கணும் செல்வப்பேற்றை யுடைத்தாயிருக்கும் என்பதற் கையமில்லை. எங்கும் நிறைந்துள்ள ஏக பராபரவஸ்துவாகிய எம்பெருமான் நம்மவர்களுக்கு நற்குணத்தைக் கொடுத்தருளவேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

சே. வெங்கடராமன், தலைமை ஆசிரியன்,
போர்டு பாடசாலை, தச்சகுடி, சித்தூர் தாலூகா.

குறிப்பு:—மேல்நாட்டார் யாரேனும் இவ்வாறு தங்கள் தேசாசாரத்தைக் கைவிட்டு அன்னிய நாட்டாரைப்போல் உடைதரித்து நடிக்கிறார்களா என்பதை நம்மவர் கவனித்தால், அப்போது அவர்களிடம் உள்ள நற்குணங்களை மட்டுமே நாம் கைப்பற்றவேண்டும் என்கிற அறிவு நம்மவர்க்குண்டாகும். நமது ஆசாரத்தைக் கைவிட்டு அவர்களைப்போல் வேடமணிந்துகொண்டால் அவர்கள் நம்மைக் கௌரவப் படுத்துவார்களென்று இவர்கள் கருதுகிறார்கள். உண்மையப்படியில்லை. இவர்கள் தேசாபிமானமும், தமக்கென ஒரு ஆசாரமும் இல்லாத இழிவான ஜனங்களென்றே அவர்கள் அவமதித்துக் கேலி செய்கிறார்கள். இத்தகைய தவறான நடக்கை நம்மைவிட்டொழிகிறவரையில் நம்மவர்களை அன்னிய நாட்டார் ஒருபோதும் மதியார்கள். நம்மையே நாம் அவமதிக்கும்போது அன்னியர் நம்மை நன்கு மதிப்பார்களென்று நாம் எதிர்பார்ப்பது மூடத்தனமே.

பத்திரிகாசிரியர்.

தபால் கொள்ளைக்காரர்கள்.

(359-ம் பக்கத் தொடர்ச்சி)

இரவு 8 மணிக்கெல்லாம் இரண்டு துஷ்டர்களும் சாமிநாதன் வீட்டில் புஸ்தகசாலையில் உட்கார்ந்து தங்கள் கூட்டாளிகளின் வரவை யெதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். எல்லாம் ஆயத்தமாய்விட்டது. இரயிலுக்கும் செல்ல வண்டிகூட ஆயத்தமாய் வந்திருக்கிறது. காலம் போகப்போக

சென்று, துவாதசாந்தஸ்தானத்தில் அளவற்ற ஆதித்தர்போலப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் பரசிவனைத் தரிசித்து, அதனோடு கலத்தலே யோகமாம் என்பர்.

இதற்கு இடைகலை பிங்கலை நாடிகளைச் சோதித்துச் சுழுமுனாநாடியில் பிராணவாயு வியங்குமாறு அப்பியாசிக்கவேண்டும். அப்போதுதான் பிராணவாயு சரீரம் முற்றும் பூரித்துக் கபாலமளவும் செல்லும். அப்போது பாம்பின் வடிவாய்ப் பிரமரந்திரவாயிலை யடைத்துக்கொண்டு தூங்குகிறதுபோ லிருக்கும் குண்டலிசத்தி ஜ்வலிக்கிற மூலாதார அக்கினியால் சூடுகொண்டு அவ்விடத்தை விட்டு விலகும். விலகினால் பிரமரந்திர வழி திறக்கப்படும். அந்தவாயில் வழியாய் பிராணவாயுவோடு ஜீவன் அதில் பிரவேசிக்கும். (தொடரும்.)

சீவானந்தசாகர யோகீஸ்வரர்.

பெண்கள் பக்கம்.

ஒரு கடிதம்.

பிரிய சகோதரிக்கு,

நீ இங்கிருந்து புகுந்த வீடு சென்று சுமார் ஒரு மாதம் ஆகிறது. நீ இனிமேல் இங்கு இருந்ததுபோலிராமல் ஒரு புதிய வாழ்வில் வாழ்வதாக நினைத்து ஒழுகவேண்டும். உனக்கு எவ்விதம் ஒழுகல் வேண்டுமென்பது, உன் வித்தியாப்பியாஸத்தாலும், பிறர் சொற்களாலும் நன்கு தெரிந்தபோதிலும், உன்னிடத்தில் எனக்குள்ள சகோதரவாஞ்சையாலும், நீ கற்றவற்றையும், கேட்டவற்றையும் அனுஷ்டித்து நற்குணவதியாய் நடக்கவேண்டுமேயென்ற இயற்கைக் கவலையாலும், உனக்கு ஏற்கனவே கூறியுள்ள புத்திமதிகளிற் சிலவற்றை உனக்கு ஞாபகப்படுத்த இக்கடிதம் எழுதுகிறேன்.

நீ இங்கிருந்ததுபோல் புகுந்த வீட்டில் இருக்கமுடியாது. இருக்கவும் கூடாது. உன்னுடன் அடுத்துப் பழகாத புது மனிதர்களுடன் பழகி அவர்களுக்கு, ஹிதமாயும், அனுகூலமாயும் இருந்து அவர்கள் பிரியத்தைச் சம்பாதிக்கவேண்டும். நீ எப்போதும் இனிமையாகவும், மெதுவாகவும், மரியாதையாகவும் பேசவேண்டும். காரியமுண்டானால் மாத்திரம் பேசவேண்டுமேயல்லாது வீணாக வார்த்தைகளைச் செலவழிக்கக்கூடாது. கொஞ்சப் பேச்சும், கீழ்ப்படிதலுமே ஒருவளைப் பெருமைப்படுத்தும். உனது நாத்தியோ, மாமியோ, உன்னைக்குறித்து ஏதாவது சொன்னால் அதற்காக வருந்தவோ, பதில் பேசவோ, அதைக்குறித்து உன் சிநேகிதிகளிடத்து பிரஸ்தாபிக்கவோ கூடாது. அவ்விதம் சொல்வது அவர்களுக்கு உன்பேரிலுள்ள பிரியக்குறைவு வளர ஹேதுவாயிருக்கும். எப்போதும் சந்தோஷமுகத்துடனேயே இருக்கவேண்டும். உன் பொறுமையே உன்னைப் பெருமைப்படுத்தவேண்டும்.

உன் பர்த்தாவுக்கு மனம் கோணாதபடி நடந்துகொள். அவர் கோபித்தால் நீயும் பதிலுக்குக் கோபியாதே. பர்த்தாவிடம் பேசும்போது சமயமறிந்துபேசவேண்டும். நான்குபேருடனிருக்கும்போது பேசக்கூடாது. உனது நாத்தி, மாமி முதலியவர்களைக் குறித்து உன் பர்த்தாவிடம் ஒருபோதும் கோட் சொல்லாதே. அவ்விதம் சொல்வதால் உன் பர்த்தா உன்னை மேன்மையான குணங்கள் வாய்ந்தவளாய்க் கருதமுடியாது. எப்போதும் சுறுசுறுப்பாகவே யிருக்கவேண்டும். ஏனென்றால் சோம்பலிருக்குமிடம் மூதேவி யிருப்பிடம். உனது ஒழிவு நேரங்களை நல்ல பிரபந்தங்களை வாசிப்பதிலும், சத்விஷயங்களைப்பற்றிச் சிந்திப்பதிலேயும் கழிக்கவேண்டும். ஆடல், பாடல், நாடகசாலை முதலிய விஷயங்களைக் குறித்து உன் சிநேகிதிகள் பிரஸ்தாபிக்கக்கூட நீ இடங்கொடுக்கலாகாது. உன் சிநேகிதிகள் எங்காவது உன்னை அழைத்தால் புருஷன் அனுமதியின்றிப் போகாதே. தனியே வீட்டைவிட்டு ஒருபோதும் செல்லாதே. மற்றவர்களுக்கு உன்னிடத்தில் அச்சமும், மரியாதையும், வீட்டிலுள்ளவர்களுக்குப் புத்திரவாஞ்சையும், உன் பர்த்தாவுக்கு மாறாத வாத்ஸல்யமும் உண்டாகத்தகுந்தவிதத்தில் நடந்து, நீ உனக்கும், உனது பிறந்த வீட்டுக்கும், புகுந்த வீட்டுக்கும் கௌரவத்தை உண்டுபண்ணுவாயாக. அதற்கு ஈசுவரன் உன்னை அனுக்கிரகிப்பாராக.

N. சுப்பிரமணிய அய்யர்,
கோல்ஸ்டன் ஹில், நாகர் கோவில்.

சந்தா நேயர்களுக்கு ஓர் அறிக்கை.

1922௵ ஜூன்மீ 14உக்குள் நம்மிடம் வந்து சேரும்படி முன்னுடிச் சந்தாத்தொகையை யனுப்பினவர்களுக்கு ஏற்கனவே நாங்கள் செய்திருந்த விளம்பரப்படி "உருத்ரோத்காரி வருஷத்திய ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கம்" இனாமாக 7-4-1923க்குள் அனுப்பிவிட்டிருக்கிறோம்.

9-ம் ஆண்டு.

அடுத்த ஆடிமீ 9-ம் ஆண்டு பிறக்கிறது. கடந்தவருடம் அனுப்பியது போல் ஆனிமாத சஞ்சிகையை வி-பி-யிலனுப்பி 9-ம் வருட சந்தாவை வசூலிக்கத் தீர்மானித்திருக்கிறோம். முன்பணமனுப்பாமல் வி-பி-யில் சஞ்சிகை பெறுவதால் 3 அணா அதிகச்செலவும் வீண் ஆலசியம் முதலியவைகளும் நேர்வது யாவருமறிந்ததே.

கடந்த வருடம் மேமீ 30உ வரைக்குமேல் தவணை வைத்திருந்தோம். சிலர் ஜூன்மீ முதலில் சம்பளம் வரும்காலமானதால் அப்போது சந்தாவை யனுப்ப அனுகூலமாயிருக்குமென்று வரைந்தார்கள். அதனால் பிறகு ஜூன்மீ 14உ வரைத் தவணையை யொத்திவைத்தோம். ஆனால் அவ்விஷயம் ஜூன்மாதம் வெளியான சஞ்சிகையில்தான் பிரசுரிக்கப்பட்டது

துறவு—யோகம்.

(348-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதுகாறும் கூறிப்போந்த பிரமசரியம் முதல் வானப்பிரஸ்தம் வரையிலும் கன்மமே யனுஷ்டிக்கப்படும். இக்கன்மத்தைக் கன்மயோகமென்று நூலுணர்ந்த பெரியோர் கூறுகின்றனர். ஏனெனில் கன்மமும் மனமொரு வழிப்பட நிலைநிறுத்திப் பரப்பிரமதியானத்துடன் செய்யப்படுவதால் என்க. யோகமென்பது என்ன? சலன சுபாவமுள்ள மனம் அசையாமல் நின்று பிரமத்துடன் ஆன்மாவைக் கலக்கச்செய்வதேயாம். யோகமென்பதற்குக் கலத்தல் கூடுதல் என்பதே பொருளாம். ஆன்மா பரமான்மாவாகிய பிரமத்தோடு கலப்பதே யோகமென்பர் பெரியோர். சிலர் சிவஜீவக்கலப்பே யோகமென்று பொருள்படுத்துவர். எங்ஙனமாயினும் மனமொரு வழிப்பட வேண்டுவதே யோகத்தின் இயல்பு. ஆதலால் யக்ஞம், ஹோமம், தவம், பக்தி, தெய்வாராதனை, குருபக்தி, மாதுர்பிதுர்பத்தி, பெரியோர் சேவை, தீர்த்தயாத்திரை, க்ஷேத்திரயாத்திரை, ஆலய தரிசனம், அதிதிபூஜையாகிய இவைகளும் இவைபோல்வனவான சற்கருமங்களும் கன்மயோகத்தின்பாற்படும். இக்கன்மயோகத்திலேயே அஷ்டாங்கயோகமும் அடங்கும். சரியை, கிரியை, யோகம், என்பனவெல்லாம் கன்மத்திலேயேயடங்கும். இந்த யோகமே துவிஜர்களுக்குப் பிரமோபதேசமென்று உபதேசிக்கப்படுவது. இதனை உபநயனமென்றும் கூறுவர் ஆதலால் பிரமசரிய முதல் வானப்பிரஸ்தம் வரைக்கும் உள்ள கன்மமெல்லாம் யோகமேயாம். யோகமில்லாமல் கன்மம் பலசித்தி தருவதில்லை. அதனால் கன்மசித்தியுடையவனுக்கே ஞானம் சித்திக்கும். அந்த ஞானத்துடன் பிரமதியானத்திலிருப்பதே ஞான யோகமாம். இதுபற்றியே ஞானயோக கருமயோகம் இரண்டும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட கர்மங்களென்று நினைக்கவேண்டாம். இரண்டுமொன்றேயாம். அப்படிச் சொல்லுகிறவர்கள் கசடறக் கற்றவர்களல்ல. இவ்விரண்டில் ஒன்றைச் செய்கிறவனும் ஒரே பலனை யடைகிறான். ஞானயோகத்தைச் செய்கிறவன் அடைகிற பலனையே கர்மயோகியும் அடைகிறான். ஆகையாலிரண்டுமொன்றே, வேறல்ல*. இந்த உண்மையை யுணர்ந்தவனே பண்டிதன். கர்மயோகமின்றி ஞானயோகத்தை யடையமுடியாது. கர்மயோகத்தைப் பூர்ணமாய்ச் செய்து முடித்தவன் சித்தசுத்திவாயிலாய் ஞானம் பெற்று மோட்சத்தை யடைகிறான். பலனை விரும்பாமல் எவன் கர்மத்தைச் செய்கிறானோ அவனைப் பாபங்கள் அணுகா. "இந்தக் கன்மயோகத்தை முன்பு சூரியனுக்குபதேசித்தேன். அவன் புத்திரனாகிய மனுவுக்குச் சொன்னான். அவன் இக்ஷ்வாகுவுக் குபதேசித்தான். இவ்வாறு பரம்பரையாக வந்த கன்

---

* தரம் பற்றி யிரண்டாகக் கூறப்பட்டது. சித்தசுத்தி வாய்க்கப்பெற்றவர்கள் ஞான யோகத்தையும், ஏனையோர் கர்மயோகத்தையும் அனுஷ்டிக்கவேண்டிய அதிகாரிகளாவர்.

மயோகத்தை இராஜரிஷிகள் அனுஷ்டித்து வந்தார்கள். அந்தக் கன்மத்தை ஏ பார்த்தா! நீயும் அனுஷ்டிக்கக்கடவை" என்று கண்ணன் தமது கீதையில் கன்மயோகத்தை வெகுவாக விரித்துரைத்தருளினர். ஆதலால் நித்திய நைமித்திக கன்மங்களைக் குறைவறவனுஷ்டித்து அஷ்டாங்கயோகத்தை யுணர்ந்து ஒழுகுவதே தவநெறி யென்று கூறப்படும்.

இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் எட்டு அங்கங்களுடன் கூடியதாதலால், இது அஷ்டாங்கயோகமென்று கூறப்பட்டது. 1. இயமம்,—கொல்லாமை, சத்தியம் பேசுதல், திருடாமை, பிறர் பொருளை இச்சியாமை முதலிய சற்கருமங்களடங்கியது. 2. நியமம்-தவம், தூய்மை, உண்மை நூல்களை யோதியுணர்தல், சந்தோஷமாயிருத்தல், தெய்வாராதனை முதலியவை. 3. ஆசனம்-பிராணாயாமம் செய்வதற்குத் தக்கவாறு உட்காருதல். அது சுவஸ்திக முதல் சுகம் ஈறுதியாக யோகநூலிலுரைக்கப்பட்டவையாம். 4. பிராணாயாமம்—இரேசகம், பூரகம், கும்பகம் என மூவகையாம். பிராணவாயுவை யுள்ளுக்கிழுத்தல் பூரகமாம். அவ்வாயுவை யுள்ளுக்குள்ளே நிறுத்தல் கும்பகமாம். இரேசகம் வாயுவை அளவறிந்து வெளிவிடுதலாம். இந்தப் பிராணாயாமமே யோகத்துக்கு உயிர்போல்வது. இது சித்தியானால் மற்றவை யெளிதில் சித்தியாம். இதுவே மனதைச் சலியாமல் நிறுத்துவதற்குச் சாதனமாக நிற்பது. பிராணவாயு இயங்குந்தோறும் மனமும் சலித்தலால் வாயுவடங்கினால் மனமும் அடங்கும் என்பது இந்த யோகக்காரர் கருத்து. இதனால் பிராணவாயுவை வாசி (குதிரை) என்றும், மனம் அதிலேறி யுலாவிவரும் இந்திரிய ராஜனென்றும் கூறுப. வாசியடங்க மனமுமடங்கி நிற்குமென்பர். "ஆயின்மிக்க வறிஞர் செயலெலாம், நேயமிக்க மனத்தை நிறுத்தல்காண், வாயுநிற்க மனமு முடனிற்கும், தோயநிற்குறி னிற்குந் துரும்புமே" என்று ஆன்றோர் கூறியுள்ளார். ஆதலால் பிராணாயாமமே கன்மஞான யோகங்களுக்குச் சிறந்த சாதனமாயிருக்கின்றது. இதைக் குருமுகத்தாலுணர்ந்து சித்திபெற்றவனே சித்தன், யோகி, ஞானி யென்று புகழ்ந்து கூறப்படுவான். அவனுக்குச் சித்தியாகாதது ஒன்றுமில்லை. 5. பிரத்தியாகாரம் உபாதியை நீக்கி அந்தர்முகனாயிருத்தல், 6. தாரணை—கண்டம், இதயம், நெற்றி, கபாலம், நாபி, புருவநடு இவற்றில் ஒன்றில் சதா மனதைச் செலுத்தியிருத்தல். புருவநடுவில் சிந்தைவைத்திருப்பதே சிலாக்கியமாம். 7. தியானம்—புலன்களை யடக்கி யோகத்திலிருத்தல். 8. சமாதி—இந்த யோகவலிமையால் சரீரத்துக்குள் ஆன்மாவாகிய தன்னைக்கண்டு தரிசித்தல்.

இவ்வாறு எட்டுவகையாகக் கூறப்படினும் பூரக கும்பக ரேசகத்தால் வாயுவையுள்ளடக்கி மூலாதார அக்கினியை எரியச்செய்து, ஆண்டு பிரமரந்திர துவாரத்தை யடக்கிக்கொண்டு, பிராணவாயுவை ஆன்மாவுடன் பிரமரந்திர மார்க்கத்தில் செல்லாதபடி தடுத்து நிற்கும் குண்டலி சத்தி யென்னும் நாடியை விலகச்செய்து, அந்தப் பிரமரந்திர மார்க்கமாய்ச்

சுழுனை அல்லது சுழிமுனை யென்பது. அங்குதான் ஆன்மா சாக்கிராவஸ்தைப்போது இருக்குமிடம். கண்களைப் பாதி மூடி இரண்டு கண்களின் பார்வையையும் ஒரே யிடத்தில்—நாசிநுனியில்—நாட்டினால், நாட்டம் புருவ மையத்தில் சேரும்.

ஆன்மா மனதோடு சம்பந்தப்படின் மனதின் இரஜோ தமோகுணங்களால் சலனமடைகிறது. ஆன்மா லலாடமையத்தில் தனித்து நிற்பதே இங்கு வேண்டிய விஷயம். கண்கள் முழுமையும் மூடிக்கொண்டால் கேவலம் (நித்திரை) உண்டாகும். முழுமையும் திறந்துகொண்டால் சகலம் அதாவது பகிர்விஷயங்கள் தோன்றும். சகல கேவலங்கள் யோகாப்பியாசத்திற்கு விரோதிகள். சகல கேவலங்கள் தாக்காத இடமே நாம் அடையவேண்டிய இடமாகும். ஏககாலத்தில் மனதை யொடுக்கிப் புருவ மைய ஸ்தானத்தில் நிலைத்துநிற்கக் கூடியவர்களுக்கு இருவிழிகளின் பார்வையையும் ஒரு இடத்தில் நாட்டுதல் முதலிய தொழில் வேண்டுவதின்றாம். ஆனால் அது எல்லாருக்கும் சாத்தியமான காரியமல்ல. அதனாலேனே இந்த அப்பியாசம் விதிக்கப்பட்டது.

அபானன் பிராணன் என்ற இரண்டு வாயுக்களில் அபானன் அதோமுகமாகவும் (கீழ்நோக்கி), பிராணன் ஊர்த்துவமுகமாகவும் (மேல்நோக்கி) செல்வன. கும்பகத்தால் இவற்றை நிறுத்தல் மனமடங்குவதற்காகவே. வாயுவடங்கிடின் மனமடங்கும் என்பது ஒருவழி. ஆனால் வாயு மறுபடி கிளம்பின் மனமும் அலையத்தொடங்கும். மன ஒடுக்கமே வேண்டுவது. ஆதலின் நேரே மனதை யொடுக்குவதே உத்தமமார்க்கம் என்பது மேலோர் கருத்து.]

ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

6-வது *யோக அத்தியாயம்.

(ஐந்தாமத்தியாயத்தி னிறுதியில் கூறப்பட்ட யோகத்தைப்பற்றி இந்த ஆறும் அத்தியாயத்தில் விரிவாகக் கூறப்படுகிறது.)

முன் அத்தியாயத்தில் பகவான் சர்வ கர்மங்களின் தியாகமேயோகம் என்று அருளினர். இதனால் சர்வ கர்மங்களும் விடற்பாலன வென்றாகிறது. ஆகவே சந்நியாசத்தினும் யோகத்தினும் கர்மம் மிக்க கீழானதாகிறது என்று அர்ச்சுனனுக்குண்டாகும் சங்கையைப்பற்றி, அவனை யுத்தரூபமான கர்மத்திற் பிரவிர்த்திப்பித்தற் பொருட்டுப் பகவான் மீண்டும் அக்கர்மயோகத்தின் சிறப்பைக் கூறியருள்கின்றார்:—

ஏ பார்த்த! தான் செய்யும் கர்மங்களின் பயனை யிச்சியாமல், செய்ய வேண்டிய நித்திய கர்மங்களைச் செய்கிறவன் சந்நியாசியும் யோகியுமாவான்.

* வடநூலில் 'அத்தியாத்ம யோகம்' என்று பெயர்.

தம்மிடத்துப் பொருந்தின சங்கற்பங்களனைத்தும் தியாகம் செய்யாதோர் யோகிகளாகமாட்டார்கள். பலவிச்சையோடு சர்வ கர்மங்களின் தியாகமே சரியான சந்நியாசமும் யோகமுமாகும்.

நிஷ்காம கர்மம் செய்வோர் யாகாதிகளையும் நித்திய கர்மங்களையும் விட்டவரல்லரேனும், கர்மபலனைத் தியாகம் செய்தவர்களாதலின் சந்நியாசிகளும் யோகிகளுமாவர். சந்நியாசம் என்பது சகல இச்சைகளையும் தியாகம் செய்தல். யோகம் என்பது சித்தத்தின் கண்ணுள்ள விக்ஷேபத்தை யொழித்தல். நிஷ்காம கர்மம் செய்வோனிடம் கர்மபலத்தியாகமும், கிடையாதவற்றில் இச்சையில்லாததால் சித்தத்தில் விக்ஷேபமின்மையும் உளவாமாதலின் அவன் சந்நியாசியும் யோகியுமாவன்.

[இச்சையற்ற விடத்தில் யோகம் சுலபமாய்ச் சித்திக்கும்—என், ஞானமே சித்திக்கும். மனம் இச்சாசொரூபம். இச்சையற்றால் மனம் ஒடுங்கும். உலகசம்பந்தமான இச்சை யெப்போதும் நாமரூபத்திலே நாட்டமுடையது. அதனால் இச்சையொழியின் நாமரூபநாட்டமும் மனதில் தரியாது. நிஷ்காமகருமம் செய்பவன் இச்சையற்றவனாகவே யிருக்கவேண்டும். ஆதலின் அவனிடம் சந்நியாசம், யோகம், இவற்றின் குணம் உண்டு என்பது கருத்து.]

பகவான் கர்மயோகமே சிரேஷ்டமானதென்று உபதேசித்ததாலும், சுருதியும் ஒருவன் சீவியகாலம் முழுமையும் கர்மயோகம் செய்யத்தக்கது என்று கூறியிருப்பதாலும், யாவருமே (யோகசாதனை கைவந்த அதிகாரிகூட) சீவியபரியந்தம் கருமயோகம் செய்யவேண்டுமோ என்று அர்ச்சுனனுக்கெழும் சங்கையை யொழிக்கப் பகவான் அக்கர்மயோகத்தின் கால அளவைப்பற்றிக் கூறியருள்கின்றார்:—

ஏ பார்த்த! யோகசாதனம் கைவர இச்சையுடையவனுக்கு நிஷ்காம கருமம் சாதனமாகும். அச்சாதனத்தால் சித்தசுத்திபெற்று யோகத்தையடைந்தபின் (யோகத்தில் ஆரூடனாயின்) அவன் சகல கர்மங்களையும் தியாகம் செய்யவேண்டுமேயன்றி, பின்னும் கர்மத்தில் ஈடுபடுதல் உசிதமன்றாம். யோகபூமி கைவந்தபின் கர்மங்கள் விக்கினங்களாகும்.

[சித்தசுத்தி வாயிலாய் யோகம் கைவருமட்டுமே நிஷ்காமகருமம் அதற்குச் சாதனமாகவேண்டுவதாகும். இச்சையற்று மனோலயம் வாய்ந்து யோகம் கைவந்தபின் சகல கர்மபரித்தியாகம் செய்துவிட்டு, ஞானநிஷ்டைகூட முயலவேண்டுமாதலின், பின்னும் கர்மம் செய்துகொண்டிருப்பது ஞானநிஷ்டைக்கு இடையூறாகும் என்பது கருத்து. நிஷ்காம கர்மம் சித்தசுத்தியை யளிப்பதற்காகவே வேண்டப்படுவது. மற்றபடி சாதாரண கர்மங்கள் அஞ்ஞானத்தை யொழிக்கா. சித்தசுத்திபெற்றுத் தன்னை யறிந்தாலன்றி எவ்வளவுகாலம் கர்மம் செய்யினும் ஞானமுதியாது.

"பங்க மாகுமஞ் ஞானத்தைக் கருமங்கள் பகைசெயா துறவாக்கும்
துங்க ஞானமே கருமவஞ் ஞானத்தைச் சுடுகின்ற நெருப்பாமே"

"மனைக்குள் வைத்தபண் டங்களை மறந்தவன் வருடநூ றழுதாலும்
நினைத்து ணர்ந்தபின் கிட்டுமப் படியிந்த நின்மல வான்மாவும்
அனாத்த மானதன் மறதியைக் கெடுத்துத்தன் னறிவினாற் காணாமல்
கனத்த கர்மங்க ளாறுகஞ் செய்யினுங் காணுமோ காணாதே."
(கைவல்லிய நவநீதம்)

(தொடரும்) சீடன்.

"ஆதவன் றன்னைப் பார்த்திட் டகிலத்தைப் பார்த்த போது
ஆதவ ெனொளிமே லிட்டே யகிலந்தோன் ருதவா போற்
சேதனச் சிவத்தை நோக்கிச் செகத்தினை நோக்குங் காலை
சேதனச் சிவமே விட்டுச் செகமெலா மறைந்து போமே"

(வள்ளலார் - பதிபசுபாசவிளக்கம்.)

ஞானி எங்கும் எல்லா வஸ்துக்களையும் சச்சிதானந்த சொரூபமாகவே காண்கிறான். அவன் யாவற்றிலும் சமதிருஷ்டியுடையவனாதலின் குதிரை, யானை, கழுதை, நாய் முதலியவற்றில் ஒரு வித்தியாசத்தையும் அவன் காண்பதில்லை. ஏனெனில் அவனுக்கு நாமரூபத்தில் திருஷ்டியில்லை. இத்தேகத்திலிருக்கும்போதே அவன் துவித உலகத்தைக் கடந்தவனா யிருக்கிறான். இத்தகைய ஜீவன்முத்தன் தேகம் நீங்கியதே விதேக கைவல்யத்தை யடைகிறான்.

"எல்லாம் சிவமென்னு மெண்ண முனக்குண்டே
லெல்லா நலனுமுனக் கெய்துமே" என்றனர் வள்ளலார்.]

அர்ச்சுனன் "ஏ பகவான்! இந்திரியங்கள் விஷயங்களில் பிரீதி யடைந்து பிரவேசிப்பது பல ஜன்மங்களில் பழக்கமானதாதலால், பாகிய விஷயங்களில் மனம் செல்லுமே. அப்போது பிரம்ம சொரூபத்தில் எவ்வாறு நிலைத்து நிற்கும்?" என்று வினவிய சங்கைக்குப் பகவான் அருளிச் செய்கின்றார் :—

"ஏ பார்த்த! சத்தாதி விஷயங்களிற் செல்லும் இந்திரியங்களால் அடையத்தக்க விஷய சுகங்களனைத்தையும் உள்ளத்தில் வெறுத்து நிராசையுடையவனே பிரம்மானந்த சுகத்தை யடைவான். பிரம்மசுகமே யழியாததென்றும் விஷய சுகங்கள் அழியத்தக்கவை யென்றும், பின்னர் அவற்றால் துன்பங்கள் உண்டென்றும் அறிந்த விவேகி அவற்றில் எள்ளளவும் இச்சையையான்.

[இந்திரிய வாயிலாய் அனுபவிக்கப்படும் விஷயசுகங்க ளனைத்தும் அனான்ம சம்பந்தமானவை. அவை அற்பமும், ஆதியந்தமுடையவையும் துன்பங்களை யுண்டாக்கத்தக்கவையுமாகிய அநித்தியங்களாம். பிரம்ம சுகம் ஒன்றே துக்கமற்ற நித்திய நிரதிசயானந்தமாம். விஷயசுகங்களை வெறுத்தவர்க்கே நித்தியானந்தமான பிரம்ம சுகம் கிட்டும்.]

(காமக் குரோதாதிகள் மோக்ஷத்திற்குப் பிரதிபந்தங்களாகையால் அவற்றை யடக்கியவனே முத்திக்குரியவனென்று பகவான் அருளிச் செய்கின்றார்.)

ஏ! பார்த்த! எவன் சரீரத்துடனே கூடியிருந்தும் விஷத்திற்கொப்பான காமக்குரோதாதிகளால் தகிக்கப்படாவண்ணம் அவற்றின் வேகத்தைச் சகித்து அடக்கிவிட்டுச் சர்வ சாந்தனாக விருக்கிறானோ,அவனே தீரனும் சுத்தனும் ஞானியுமாவன். அவனே பிரம்மானந்த சுகத்தையும் மோக்ஷத்தையும் அடைதற் குரியனாவன்.

[குடும்பத்தோடு கூடியிருக்கையிலேயே காமக்குரோதாதிகளின் வேகத்தைச் சகித்துச் சுகதுக்கங்களில் சமதிருஷ்டியுடையவனா யிருக்கப் பழகவேண்டும். அத்தகையோனே பின்னர் சந்நியாச நிலையில் அக் காமக் குரோதாதிகள் ஜனிக்காவண்ணம் தடுத்து பிரம்மஞானத்தை யடையத் தகுதியுடையவ னாவான்.]

(பகவான் காமக்குரோதாதிகளைச் சகித்தல் மாத்திரத்தானே மோக்ஷம் சித்தித்துவிடாதென்றும், இன்னும் அந்தர்முக சாதனம் வேண்டுமென்றும் அருளிச்செய்கின்றார்.)

ஏ பார்த்த! எப்புருடன் அந்தரான்மாவிலேயே திருஷ்டிவைக்கின்றானோ, எவன் அந்தரான்மாவிலேயே சுகித்திருக்கிறானோ, எவன் அந்தரான்மாவையே தான் பிரியப்படும் ஸ்தானமாய்க்கொள்கிறானோ அத்தகைய ஞானி பிரம்மானந்தத்தை யனுபவிப்பன்.

[பாகிய விஷயங்களின் இச்சையைவிட்டு அந்தர்முகத்தில் ஆன்ம சொரூபத்தில் இலயித்திருப்பவன் பிரம்ம சுகத்தை யனுபவிப்பான் என்பதாம்.]

(இப்போது பகவான் இனி ஆறுமத்தியாயத்தில் அருளிச் செய்யப்படும் பிரம்மஞானத்திற்குச் சாதனமான தியான யோகத்தைக் குறிப்பாயருள்கின்றார்.)

ஏ பார்த்த! சுரோத்திரம் முதலிய பஞ்சேந்திரியங்களைச் சத்தாதி விஷயங்களில் பிரவேசியா வண்ணம் தடுத்து, இரண்டு நேத்திரங்களின் பார்வையையும் இரண்டு புருவங்களின் மத்தியில் நிறுத்திவைத்து, பிராணன் அபானன் இரண்டையும் சமமாய் அசையாமல் கும்பிக்கச்செய்து, இந்திரியம் மனம் புத்திகளைச் செயித்து, இச்சை, பயம், குரோதம் இவற்றை யொழித்துச் சகல விஷயங்களிலும் விரக்தராய்ப் பழகும் யோகிகளே ஜீவன் முக்த நிலையையடைவார்கள்.

இத்தகைய யோகி எப்பொருளை யுணர்ந்து முக்தியடைகிறான் என்னும் அர்ச்சுனனது சங்கைக்கு ஆதிமத்தியாந்தங்களொன்றும் தனக்கின்றி, யாவும் தானேயாய் யாவர்க்கும் புகலிடமாயுள்ள பகவான் அருளிச்செய்கின்றார்:—

ஏ பார்த்த! பிராம்மணாதி ஜாதியபிமானமுடையோர் செய்யும் ஹோமாதி எக்ஞங்களுக்கும், அறிவுடையோர் செய்யும் குற்றமற்ற தபசுகளுக்கும், ஏழுலகங்களுக்கும் சேருமிடமாயுள்ள (சச்சிதானந்த சொரூபியாகிய) என்னை வேதங்களெல்லாம் சொல்லி முடித்தபடியே உள்ளவாறு அறிந்தவர் மீண்டும் ஜனியார்.

[சுரோத்திரம் முதலிய பஞ்சேந்திரியங்களை விஷயங்களில் பிரவேசியாவண்ணம் தடுத்தல், மனதையுண்முகப்படுத்தி அதன் சலனத்தை யடக்குவதாலும் இச்சையை யொழிப்பதாலும் கைகூடுவதாகும். இரண்டு புருவங்களின் மையம் என்பது இலலாடமையம் என்ற ஸ்தானம். அதுவே

பொதுவாய் கிறிஸ்து சபையார் யாவரும் இந்த லெந்து நாட்களில் மகா பக்தி வைராக்கியமாய் கிறிஸ்து நாதரின் பாடு மரண தியானங்கள் செய்து ஈஸற்றர்வை அனுதின வுபவாசம் செய்வதுமுண்டு. அதிலும் ஒவ்வோர் வெள்ளிக்கிழமையும் மகா முக்கியம். அப்படி யிருக்க, அவை ஒன்றுமே கவனியாது இந்தச் சுப நாட்களிலே நாடகம் நடந்தது மிகவும் விசனமேயாம். மேலும் இந்நாடகம் நடந்ததினம் வெள்ளிக்கிழமை. பக்கத்திலுள்ள லூத்தரன் சபை ஆலயத்தில் அன்று 6 மணிக்கு ஆராதனை மணியும் இங்கு நாடக தடபுடலும். இத்தால் கடவுளைத் தொழுவதிலும் காசு சம்பாத்தியம் பண்ணுவதே முக்கியம் என அவர்கள் கோட்பாடு போலும். டை நாடகத்துக்கு டிக்கட்டு விற்பனை செய்ய வாலிபப் பெண்களைக் குதிரை வண்டியில் ஏற்றி டவுனுக்குள் தெருவுகள்தோறும் அனுப்பி விற்பனை செய்விக்கச் செய்தது எவ்வளவு தூரம்மேலானதோ தெரியவில்லை. மேல்நாட்டு நாகரீகத்தால் உண்டாகும் இவ்வித ஏதுவால் "சுடுபால் குடித்த பூனைபோல்" பெண் கல்வியும் மேல்நாட்டு நாகரீகமும் வேண்டவே வேண்டாம் என நம்மவர்கள் சொல்ல ஏதுவாகிறது. மாலை 6 மணிக்குத் தொடங்கி இரவு 9 மணிக்கு முடியும் அந்நாடகத்துக்கு மாலை 4 மணிக்கே வரும் எலிமெண்டரி பாடசாலைப் பிள்ளைகளுக்கு இலவச டிக்கட்டு கொடுப்பதாய் அனுமதித்தப்படி சென்ற பாலகர்கள் எவ்விதம் அவ்வளவு நேரம் பசிதாங்கக்கூடும்? அதற்கு நாடக அதிகாரிகள் என்ன சிற்றுண்டி பகிர்ந்தனரோ? தெரியவில்லை. கைப்பிள்ளைகளுடைய தாய்மார்களுக்கு இடமில்லை எனவும், பின்னரோ 6 வயதுக்குமேல் அரைச்சார்ஜ் விகிதம் வசூலிக்கும் ரெயில்வேக்காரர் வரிக்கு மேலாக அரைவயது ஒரு வயதுள்ள பிள்ளைகளுக்கும் அரைசார்ஜ் வாங்கி பிரவேசக்கட்டணம் கொடுக்கப்பட்டது. கர்னாடக விஷயங்களும் போய் பெண்களுக்குச் சற்று விடுதலையும் கிடைக்கப்பெறும் இக்காலத்தில் இவ்வித அரிய காரியங்கள் நடப்பதால் "பழைய குருடி கதவைத்திறடி" என்ற மொழிப்படிக்கு பெண்களை வீட்டில்போட்டு கதவைச்சாத்திப் பெண்கல்வியும்போதும், மேல்நாட்டு நாகரீகமும் போதும், நாடகம் நடித்தலும் போதும் என அபிப்பிராயப்படாதவரும் அன்றுளரோ? பெண்கள் வாலிப வயதில் இவ்விதம் நடித்தலால் அப்பெண்களைப் பழக்கும் ஆடவர்களின் ஸ்திதியும் மனரம்மியமும் எவ்வாறிருக்கும்? டை நாடக ஸ்தலத்தில் பார்த்த அப்பெண்களை அடையவரும் மாப்பிள்ளைகள் அவர்களைப்பற்றி என்ன அபிப்பிராயப்படுவர்? பின்னர் இவர்களின் ஜீவியத்திலும் "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்றாற்போல் சகல பகிரங்க நாடகங்களுக்கும் கடன் வாங்கியாவது பார்க்கத் தலைப்படாரோ? மேல்நாட்டு நாகரீகத்தைக் கடைப்பிடித்தால் நம் தேசப் பெண்களின் விஷயங்களை எவரும் குறைகூற ஏதுவுண்டாமே.

ஆகையால், மதுரையில் இதுவரை இவ்விதம் நடந்திராத புதுமாதிரியான பழக்கம் தலைகாட்டுவது பெரும் விசனமே. இத்தால் யாவருக்கும் அதிருப்தியும் அவநம்பிக்கையும் உண்டாவதுடன் பெண்கள் நாடகம்

நடித்ததால் கிரிஸ்து சகோதரர்களைப்பற்றியும் கூடப் பொது அபிப்பிராய பேதமுண்டாகிறது. இனிமேலாவது இவ்விதம் நடைபெறாதிருக்குமாறு யாவரும் எதிர்பார்க்கிறார்களாகையால் பாடசாலை மானேஜரும் தலைமை உதவி உபாத்திமார்களும் சீர்திருத்தம் செய்யவேண்டியது மகா முக்கியம்.

"ஸௌராஷ்ட்ர."

குறிப்பு:—ஹிந்து தாய் தந்தையர்கள் தமது பெண்மக்களின் விஷயத்தில் இத்தகைய ஜாக்கிரதை குறைவாய் நடந்துகொள்வது பெருங்குற்றமாகும். அன்னியமதம் ஆசாரம் போதிக்கப்படும் பாடசாலைகளுக்கு நமது பெண்மக்களை யனுப்புவதே பெருந்தவறு. இதனால் நேரிடும் பெருந்தீங்குகளைப் பன்முறை கண்டும் கேட்டுமிருந்தும் இன்னம் நம்மவர்க்கு உணர்வு வராதது காலக்கொடுமையே. அதிலும் பெண்களுக்கு நாடகம் கற்பித்து நடிக்கச் செய்வதைவிட அவர்களுக்குச் செய்யவேண்டிய தீங்கு வேறொன்றுமில்லை. பெண்கள் நாடகம் பார்ப்பதே தகுதியல்லவென்று ஆன்றோர் கூறும்போது, அவர்களையே நடிக்கவிடுவது அறிவுடைய பெற்றோர் செய்கையாகுமோ! பெற்றோர் இனியேனும் தம் பெண்மக்களைக் கவனித்தாலன்றி பெருந்தீங்கு விளையுமென்பதில் ஐயமின்றாம்.

பத்திரிகாசிரியர்.

பகவத்கீதை வசனம்.

(352-ம் பக்கத் தொடர்ச்சி.)

[எங்கும் வியாபகமாக விருப்பவை சத்து, சித்து, ஆனந்தம், நாமம், ரூபம் என்ற ஐந்து அம்சங்களே. இவற்றில் சச்சிதானந்தமாகியது பரப்பிரம்மம். நாமரூபமாயுள்ளது உலகம். சச்சிதானந்தமாகிய பிரம்மம் அதிட்டானம். அதனிடத்தில் இந்த நாமரூபமாகிய பிரபஞ்சம் ஆரோபமாகத் தோன்றியிருக்கிறது. ஆரோபம் தோன்றிக்கொண்டிருக்கும் வரையில் அதிஷ்டானமாகிய பிரம்மம் தோன்றாது. சாதாரணமாய் மனம் நாமரூபத்திலேயே நாட்டம் வைத்திருக்கிறது. "அந்த நாட்டம் உள்ளளவும் பிரம்மசொரூபம் தோன்றாது. நாமரூப நாட்டம் விடின் நமது சொரூபம் தோன்றிவிடும்" என்றருளினர் ஸ்ரீ குமாரதேவர்.

"நாம ரூபந் தனைநோக்கி நாடன் மனமும் புறமுகமும்
நாம ரூபந் தனைநீக்கி நாட லறிவு முண்முகமும்
நாம ரூபத் தெவ்வளவு நாட்டஞ் சொரூபந் தோன்றாது
நாம ரூப நாட்டம்விடி னமது சொரூபந் தோன்றிவிடும்."
(ஸ்ரீ குமாரதேவர்.)

நாமரூப நாட்டம் மறைந்தால் சச்சிதானந்தம் தோன்றும். அது தோன்றியபின் உலகத்தோற்றம் மறையும். (சூரியனை நோக்கிக்கொண்டிருந்து பிறகு உலகைப்பார்த்தால் உலகம் தோன்றாததுபோல்)

இச்சாஸ்திரத்தினுண்மை பெரும்பாலும் எல்லோருக்கும் பிரத்தியட்சமாயிருப்பினும், இலங்கையில் மதவாச்சி யென்னும் புகைரத ஸ்தானத்திற் கணித்தாய் ஜனவரி௴ 25௳ வியாழக்கிழமை இரவு 12½ மணிக்கு, இலங்கையில் முன்னொரு பொழுதும் நடந்திராத விதமாய் அனேகம் பிரயாணிகளுக்குக் காயங்களையும், சில பிரயாணிகளுக்குச் சீவமோசத்தையும் உண்டுபண்ணத்தக்கதாகச் சம்பவித்த கொடிய புகைரத விபத்தால் மிகவும் நன்றாய் விளங்கக்கூடியதா யிருக்கின்றது. அன்றையதினம் அஷ்டமி திதியும், பரணி நட்சத்திரமும், மரணயோகமும் கூடிய அமுகூர்த்த காலமாகப் பஞ்சாங்கங்களில் குறிக்கப்பட்டிருக்கிறது. துந்துபிளு மார்கழி௴ "ஆனந்தபோதினி"யில் 240-ம் பக்கத்திலுள்ள "ஆனந்தபோதினி" பஞ்சாங்கத்திலே மேலே சொல்லப்பட்டவைகளோடு நிறுத்தாமல், அன்றைய தினத்திலே பிரயாணம் விலக்கவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியாக எச்சரிக்கை பண்ணப்பட்ட நாளிலே இக்கொடிய விபத்து சம்பவித்தது சோதிட சாஸ்திரத்தினுண்மையையும் "ஆனந்தபோதினி" பஞ்சாங்கத்தைக் கணித்தவர்களின் நுண்ணிய அறிவையும் தெளிவாய்ப் புலப்படுத்துகிறது.

மற்றெல்லா அவயவங்களிலுங் கண்ணானது எவ்வளவு விசேஷமாயிருக்கின்றதோ அதுபோல் சாஸ்திரங்களுள் சோதிடம் விசேஷமா யுள்ளது. மேலே சொல்லப்பட்ட புகைரதத்தில் சிங்கப்பூர் முதலிய தூரதேசங்களுக்குப் போகும் பிரயாணிகளும் இருந்தார்களென அறியப்படுகிறது. மிகுதியும் பிரயாணஞ் செய்யவேண்டியவர்கள் சோதிடத்தைக் கவனித்து நடப்பது கஷ்டமென்று சொல்லலாம். ஆனால் முதன்முதலாகத் தங்கள் சுயதேசங்களைவிட்டு அன்னிய நாடுகளுக்குப் பிரயாணஞ் செய்பவர்களும் மிகவுந் தூரதேசங்களுக்குப் பிரயாணஞ் செய்பவர்களும் சோதிடத்தைக் கவனித்து நடப்பது அவசியம்.

சிலர் சோதிட சாஸ்திரத்திலுண்மையில்லை யென்றும், சிலர் கூடாத நாட்களில் பிரயாணம் முதலிய கருமங்களைச் செய்பவர்களுக்குத் தீங்கு எப்போதும் வரவில்லை யென்றும் சொல்லுகிறார்கள். எச்சாஸ்திரத்திலாவது எவராவது மிகவும் நிபுணராயிருப்பது அருமை. ஆனால் சோதிட சாஸ்திரஞ் சரியாகக் கணிக்கப்பட்டால் முற்றிலும் நம்பக்கூடியதென்பது "ஆனந்தபோதினி" பஞ்சாங்கத்தினால் நன்றாய் விளங்குகின்றது. அமுகூர்த்த காலங்களில் பிரயாணம் முதலிய கருமங்களைச் செய்து விபத்து இல்லாதிருப்பவர்களுக்குக் கொஞ்சமேனும் வசதியின்மை முதலிய கஷ்டங்களாவ தில்லாம லிருந்திருக்கமாட்டாது. இப்படியுமில்லாம லிருந்தால் சோதிடம் சரியாகக் கணிக்கப்படவில்லை யென்று கொள்ளல் வேண்டும்; அல்லது அவர்களுடைய பூர்வ புண்ணிய வசத்தினாலும், கடவுளுடைய அனுக்கிரகத்தினாலும் விபத்திலிருந்து தப்பிக்கொண்டார்களென்று கருதல் வேண்டும்.

சி. முருகேசன், அனுராசபுரம்.

பணவிஷயமும், பெண் மாணவிகளும்.

நாளது மார்ச்சு௴ 2௳ மாலை 6 மணிக்கு மதுரை அமெரிக்கன் மிஷன் பெண்கள் உயர்தரப் பாடசாலையின் மாணவிகளால் தற்கால நவீனக் கோட்பாட்டை யொக்க "வேஷமணிந்து" இரு சரிதைகள் வெகு விமரிசையாய் நடித்துக் காட்டப்பட்டன. ௸ இரு நாடகங்களில் ஒன்று இந்திராணி என்ற ஓர் இனிய தமிழ்ச் சரிதை, மற்றொன்று அனேகருக்கு விளங்காத ஓர் ஆங்கில சரிதை. இங்குள்ள எட்வர்டு விக்டோரியா மண்டபத்தில் நடத்தக் கேட்டு இடம் கிடையாததால் ௸ பாடசாலையிலேயே நடைபெற நேரிட்டது. யாவரும் தடையின்றி ௸ நாடகத்தைப் பார்க்குமாறு வகுப்புவாரி டிக்கட்டு விகிதம் ரூபா 1, ½, ¼ ஏற்படுத்திரளான ஜனங்கள் படிக்கும் வாலிபப் பெண்களின் நடனத்தைப் பார்க்கவே சென்றனர். ஐரோப்பியர், சர்க்கார் உயர்பதவியிலிருக்கும் உத்தியோகஸ்தர்கள், மற்றும் வக்கீல்கள், தனவந்தர்கள் முதலியோருக்குக் கௌரவ அழைப்புச் சீட்டுகள் அனுப்பி வரவழைக்கப்பட்டனர். அன்று நாடக வசூல் ரூபா 500 எனவும் கௌரவ டிக்கட்டு பெற்ற மகான்களும் அவரவர்கள் பிரியப்படி பண உதவி செய்ததாயும் தெரிகிறது. அஃது பிரத்தியேகம். ௸ பணத்தைக் கடந்த சில வருஷங்களுக்கு முன் ௸ பாடசாலைக்கு எதிரில் ஓர் கோவில் அஸ்திபாரம் போட்டு அது கொஞ்சமும் முற்றுப்பெறாதிருப்பதைத் தீர்ப்பதற்கு உபயோகிக்கப்போவதாய்த் தெரியவருகிறது. பாடசாலையில் படித்துவரும் வாலிபப் பெண்களைக் கொண்டு பகிரங்க நாடகம் நடிக்கச் செய்து அவ்வருமானத்தைக் கொண்டு ஆலய உபயோக உதவி செய்விக்க ஐரோப்பிய அவ்வம்மைக்கு அதி நுட்ப யோசனை பகர்ந்த நம் ஆசானின் சாமர்த்தியம் மெச்சத்தக்கதே. இதுவும் கலிகால யோசனையோ! பெண் கல்வியும் மேல்நாட்டு நாகரீகமும் அதிலும் கிறிஸ்துவர்களின் விஷயத்தில் பொது அபிப்பிராய பேதமும் பாரதமாதா பிள்ளைகளுக்குள் ஒருவிதமாயிருக்க, இவை ஒன்றுமே கவனியாது "கண்ணை மூடிப் பால் குடிக்கும் பூனைக்குட்டி" தான் பால் குடிப்பதை ஒருவருமே அறியார்கள் என்றெண்ணியவாறு-௸ பாடசாலை மேல்விசாரணைக்காரர்களும் ஆசிரியர்களும் ஒருங்கே துணிந்துவிட்டனர். பெண் கல்வியையும், ஆங்கில பாஷையையும் விரும்பும் நாலு திக்குகளிலுமுள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இங்கு அனுப்ப, "இவர்களோ" அவர்களைப் பகிரங்க நாடகத்துக்கு பக்குவப்படுத்துகின்றனர். இதைப் பெற்றோர்களறிந்தால் எவ்விதம் ஆதரிப்பார்களோ. இவ்விஷயத்தை ஏற்கனவே யறிந்த பெற்றோர்கள் எத்தனைபேர் மனப்பூர்வமாய் நாடகம் நடிக்கத் தம் பிள்ளைகளை அனுப்பினார்களோ! இந்தியாவின் சகல விஷயங்களையும் நன்கறிந்த நம் ஆசிரியர்களாவது சற்று கவனித்தார்களில்லையே. சம்பளத்துக்காக உழைக்கும் அவர்களுக்குத் தேச அபிமானமுமா அற்றுப்போயிற்று?

எனவும் பொருள்படும். இங்கு "தோன்றாத் துணை ஈசுரர்" என்ற கடவுளின் திருநாமமும், மார்க்கசகாயர் என்ற கடவுளின் திருநாமமும் உய்த்து நோக்கற்பாலன; தவிரவும் "தோன்றாத் துணையாயிருந்தனன் றன்னடியோங்களுக்கே" என்ற அப்பர் தேவாரமும் கவனிக்கத்தக்கது. ஈண்டுரைத்த பொருளைப் பின்வரும் சரிதம் மெய்ப்பிக்கும் ஆதலால் அதைக் கூறுவாம். மாட்டின்மீது மிளகுப் பொதிகளை ஏற்றிக்கொண்டு வந்த தனபாலன் என்னும் ஒரு வணிகன், திருவிரிஞ்சைப்பதிக்கருகில் வருகையில் பொழுது அஸ்தமித்துவிட்டபடியால் ஆங்கு கள்வர்பய மிகுதி என ஏற்கனவே கேள்விப்பட்டுள்ளவனாதலால், கள்வருக்குப் பயந்து கடவுளை நோக்கிப் பிரார்த்திக்க அப்பதிக் கடவுள் அவ்வணிகனுக்கு வழித்துணையாக வந்து கள்வர்பய மகற்றிப்போயினர். அதனால் அவ்வூர்ச் சிவபெருமானுக்கு "மார்க்கசகாயர்" என்று பெயருண்டாயிற்று. இதை "செட்டிதனக்கு வழித்துணையானவ செங்கோசெங்கீரை" என்ற திருவிரிஞ்சை முருகன்பிள்ளைத் தமிழ்வாக்கும் தெரிவிக்கின்றது.

2-வது திக்கு என்பது போமிடம் அதாவது சுற்றம், அற்றவர்க்கு= இல்லாதவர்க்கு, தெய்வமே துணை=கடவுளே சுற்றத்தாராவார் என்றும் பொருள்கொள்ளலாம். இங்கு திருச்சிராப்பள்ளியிலுள்ள சுவாமிக்கு "தாயுமானவர்" என்ற திருநாமம் உண்டானதும், அத்தலக் கடவுள் சுற்றத்தாரற்ற ஓர் கர்ப்பிணியான மாதுக்கு அவள் தாய்போல் வந்து மருத்துவம் பார்த்துக் காப்பாற்றிய சரித்திரமும், நோக்கத்தக்கன. தவிரவும் பன்றிக் குட்டிகளுக்குத் தாயாகி வந்த திருவிளையாடலும், மாமனாக வழக்குரைக்க வந்த திருவிளையாடலும் கவனிக்கத்தக்கன.

3-வது திக்கு—அற்றவர்—கு=(வேறு ஆதாரமில்லாமல் கடவுளையே சகலமும் என்று நம்பி) மற்றவைகளைக் கைவிட்டவர்களுக்கு, தெய்வமே துணை=அக்கடவுளே துணையாவர். இங்கு "திக்குவேறில்லைத் திருவுளமேயல்லாமல்" என்ற வாக்கும் "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்ற பழமொழியும் நோக்கத்தக்கன. மதுரையின்கண் தெய்வமே துணையென நம்பிக் கோயிலின்கண் வந்து அழுது முறையிட்டுக்கொண்ட "வந்தி" என்னும் பிட்டுவாணிச்சிக்கு ஸ்ரீ சோமசுந்தரப் பெருமான் ஆளாக எழுந்தருளிவந்து மண்சுமந்த திருவிளையாடல் இதற்குச் சான்றாம்.

4-வது திக்கற்றவர்க்கு=தன்னையடையும் சரியான வழியினின்றும் அல்லது ஞானமார்க்கத்தினின்றும் (திக்கு=மார்க்கம், வழி) விலகியவர்க்கு, தெய்வமே துணை=சர்வ வல்லமையுடைய கடவுளே துணையாக விருந்து அவரை ஆட்கொண்டு உண்மை நெறியில் உய்ப்பர். ஈண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகளை உலகமாயை பற்றாவண்ணம் மணம் தவிர்த்து வலிய வழக்காடித் தடுத்தாட்கொண்ட சரிதமும், புறச்சமயம் புக்க ஸ்ரீ வாகீசப் பெருந்தகையைச் சூலைநோயால் திருவதிகையின்கண் ஆண்டருளிய சரிதமும் இதனை நன்கு வலியுறுத்தும்.

5-வது தெய்வம் என்பதற்கு பிரகாசமுடையது என்னும் பொருள் உள்ளதால் திக்கற்றவர்களுக்கு (அஞ்ஞானமாகிய இருளால் மூட்டப்பட்டு) மயங்கினவர்களுக்கு, தெய்வமே துணை=கடவுளே (மெய்ஞ்ஞானமாகிய வழியைக் காண்பிக்கும்) சோதியாவர் என்னும் பொருள்கொள்ளலாம். இதனை "கண்பாரார் கண்ணுதலாக் காட்டாக்காலே" என்ற நாவுக்கரசின் வாக்கும், "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்ற போதவூர் மேவிய வாதவூரண்ணல் வாக்கும் அன்பர்களுக்கு விளக்கும். இங்கு ஜனகாதி நால்வருக்கு அறமுரைத்த வருட்டிறம் நோக்கத்தக்கது.

இப்பழமொழிக்கு அறிஞர்கள் இன்னும் பல்வேறுவிதமாகவும் பொருள்கொள்வர். நிற்க. இப்பழமொழி சர்வ வியாபகராகிய ஸ்ரீ சிவபெருமான் தனபாலன் என்னும் செட்டிக்கு வழித்துணையாக வந்த காலமுதற்கொண்டு பிரசித்தமான பழமொழியாக வழங்கிவரலாயிற்றென்பது ஒரு சாரார் கொள்கை. மற்றொரு சாரார் மாமனாக வந்து வழக்குரைத்த திருவிளையாடலுக்குப் பிறகு இப்பழமொழி வழக்கமாயிற்றென்று கூறுவர்.

சிவபெருமானுக்கு ஆபத்சகாயேசுரர் - நற்றுணையப்பர் - தோன்றாத் துணையீசுரர் - அடைக்கலம்காத்த நாதேசுரர் - தாயுமானேசுரர் - துயர்தீர்த்த நாதர் - எனப் பல திருநாமங்கள் தொன்றுதொட்டு வழங்கி வருகின்றன. ஆகலின் இப்பழமொழியானது தொன்றுதொட்டே சிவபெருமானின் அருட்பெருக்கின் மேலீட்டினால் உலகத்தில் வழங்கிவருகின்றதென்பது துணிபு. சுபம்.

K. S. இராமலிங்க முதலியார்,
கண்டாச்சிபுரம், S. Arcot.

சோதிட சாஸ்திரமும் புகைரத விபத்தும்.

"சோதிடமென்பதின் சாதாரணக் கருத்தாவது, இராசிமண்டலத்தில் சூரியன் முதலிய கிரகங்களானவை சுற்றிவருதல், ஒன்றோடொன்று சந்தித்தல், ஒரு தானத்தில் சங்கமமாயிருத்தல் ஆகிய பலவித விகற்பங்களைத் தெரிந்து அவற்றால் நேரிடும் சூரிய சந்திர கிரகணங்கள், மழைகாலம் கோடைகாலம் முதலிய கால விகற்பங்கள், சலப்பிரவாகம், பெரும்புயல் முதலிய விசேஷ அற்புதங்கள் ஆகியவைகளைத் தெரிந்துகொள்ளுங் கணிதமுறையேயாமென்றும், இது ஆறங்கங்களில் முதன்முதலாகிய நேத்திராங்கமென்றும், கிரகங்களுக்கும், சீவர்களுக்கும், சராசரங்களுக்குமுண்டாகிய சம்பந்தத்தைக்கொண்டு பூதபௌஷிய வர்த்தமான காலங்களை இதனால் தெரிந்துகொள்ளலாமென்றும்" சோதிட நூலொன்றில் கூறப்பட்டிருக்கின்றது. ஒவ்வொருவருடைய ஆயுள் நிர்ணயத்தைத் தெரிந்துகொள்வதற்கும், சவுக்கியா சவுக்கியங்களை யறிந்து நடந்துகொள்வதற்கும் ஆதாரமாயுள்ள ஜாதகத்தையும் விசேஷ கருமங்களை ஆரம்பிக்க முகூர்த்த காலங்களையும் கணிக்கச் சோதிட சாஸ்திரம் உதவுகின்றது.

இம்மாதிரியான அனேகம் செல்வத்தைப்பற்றிய வேற்றுமைகள் நம் நாட்டில் அதிகமாய்ப் பரவி வருகின்றன. மேல்நாட்டாரை விட நாம் இரண்டு பங்கு வேற்றுமையுள்ளவர்களாய் இருக்கிறோம். அதிலும் நிலையில்லாத இச்செல்வ வேற்றுமையைப் பெரிதாகப் பாராட்டுகிறோம். நாம் முன்னேற்றமடைய முயற்சிசெய்ய வேண்டுமானால் முதலில் வேற்றுமையை நீக்கவேண்டுவது அவசியம் என்று நாம் பல முகாந்திரங்களிலும் தெரிந்துகொண்டிருக்கிறோமல்லவா? தீண்டாமையை ஒழிக்கவேண்டும் என்றால் அனேகர் பஞ்சமர்களோடு சமமாய் உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டால் தீண்டாமை ஒழிந்ததென நினைக்கிறார்கள். சமமாய்ச் சாப்பிடுவதினாலேயே தீண்டாமை ஒழிந்துபோகாது; வேற்றுமை மாறாது. இப்பொழுது சமபந்தியாய்ச் சாப்பிடுகிறவர்களுக்குள்ளும் பலவிதமான வேற்றுமை பாராட்டுகிறார்களே. சாப்பிடுவதையும் பெண் கொடுப்பதையும் தவிர மற்ற வேற்றுமைகளை என் ஒழிக்கக்கூடாதோ தெரியவில்லை. பஞ்சமர்களைத் தவிர அதிகமான வித்தியாசம் இல்லாத ஜாதியார்களேனும் வேற்றுமையில்லாமல் ஏன் இருக்கக்கூடாது? படிப்படியாய் ஒழித்துக்கொண்டு வந்தால் எந்தக் காரியமும் சுலபத்தில் முடிந்துவிடும். நமது சாஸ்திரப்பயிற்சி நமக்கு மிகவும் குறைவாய் இருப்பதினாலல்லவா நாம் வேற்றுமையை ஒழிப்பதற்காக ஏற்படுத்தும் சபைகளிலேயே பலவிதமான வேற்றுமைகளைச் செய்து பாபத்தைச் சம்பாதித்துக்கொள்ளுகிறோம். நாம் வேற்றுமையை ஒழிக்க அடிக்கடி சபை ஏற்படுத்தவேண்டும். அந்தச் சபைகளில் ஒருவிதத்திலாவது வேற்றுமையைப் பாராட்டக்கூடாது. அதிலும் அநித்தியமான செல்வவேற்றுமையை அறவே ஒழிக்கவேண்டும். தீண்டாமை கூடாது என்று சொல்வதற்கு முன்னமேயே படிப்படியாய் அதிக வித்தியாசமில்லாத ஜாதியார் வேற்றுமையை அவசியம் நீக்கிக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நாம் வேற்றுமை யில்லாதவர்கள் ஆவோம். நமக்குப் படிப்படியாய் வேற்றுமையை நீக்கி நடக்கும்படியான அறிவை அளிக்குமாறு ஆண்டவனை அன்புடன் பிரார்த்திப்போமாக.

C. S. இரகுநாதய்யன், செட்டிபாளையம்.

திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை.

“திக்கற்ற வர்க்குத் தெய்வந் துணையெனச் செப்பு வார்கள்
மிக்கதன் பொருள் வியப்பை மேதினி யோர்கள் நாடார்
தக்கநல் லறிவு கல்வி போதிலாத் தமியேன் நீட்டும்
இக்குறு வியாசந் தன்னை யினிதெனக் கொள்வர் மேலோர்.”

“திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை.” இஃது பண்டைக்காலத்தினின்றும் வழங்கிவரும் ஓர் பழமொழியாயிருந்தும், நம்மவருட் பெரும்பாலார் அதன் கருத்து இன்னதென்றும் அஃதியாது காரணம்பற்றி உண்டாயிற்றென்றும் ஊன்றிப்பார்த்து ஆராய்ந்தறிந்தனரில்லை. யானும் பன்னாளிடர்ப்பட்டு என் சிற்றறிவிற் கெட்டியமட்டில் இப்பழமொழி விஷயமாய் ஆராய்ந்தறிந்த சிலவற்றைப் பலரும் தெரிந்து ஆனந்திக்குமாறு “நம்மானந்தன்” வாயிலாக வெளியிடலானேன்.

இப்பழமொழியின் உண்மைக்கருத்து தெற்றென விளங்குவதற்கு இதன் சொற்றொடர்களைப் பிரித்து ஒவ்வொரு சொல்லையும் பொருள் ஆராய வேண்டியது அவசியமாகலின் ஈண்டு ஒவ்வொரு சொல்லைப்பற்றிய குறிப்பு என்னென்று பார்ப்போம்.

“திக்கு” என்பது எண் திக்குகளையுமே (திசைகளையும்) குறிக்கும். பிறகு ஒவ்வொரு திக்கின் அமைப்பை நோக்குங்கால் ஒவ்வொரு திக்கிலும் ஒவ்வொரு யானையும் ஒவ்வொரு காவலாளியும் (அதாவது திக்குப் பாலகர்) இருக்கிறார்கள். அதனால் ஒவ்வொரு திக்கும் ஆதரவுபற்றியே நிற்கிறது. இதனால் திக்கு என்றதற்கு ஆதாரம் (ஆதரவு) என்னும் இரண்டாவது பொருள் உண்டாயிற்று.

இனி “அற்றவர்க்கு” என்பதைப் பதச்சேதம் செய்ய, அற்றவர்—கு எனவாயிற்று. அற்றவர் என்பது இன்மையையுடையவர் அதாவது இல்லாதவர்கள். கு-என்பது நான்காம் வேற்றுமையினுருபு.

தெய்வம் என்பது தேயு என்னும் பெயரடியான், தே-பிரகாசம் என்ற பொருளை யுடையதாய், அம் என்னும் தொழிற்பெயர் விகுதிசேர்ந்து தெய்வம் என்றாகி பிரகாசிப்பது என்று பொருள்பட்டு,

“சோதியே சுடரே” என்ற மணிவாசகப் பெருந்தகையின் வாக்கிற்கிலக்கியனாய்,

“உத்தமத் தேவர்தம்மு ளுத்தமனாகும்” அழல் வடிவினனாகிய சிவபெருமானைக் குறிக்கும்.

“ஏ” தேற்றப் பொருளில், சர்வ வல்லமை யுடைய கடவுளைத் தவிர வேறொருவருமில்லை என்பதை நிச்சயிக்கவே வந்தது.

“துணை” என்பது பற்றுக்கோடு என்னும் பொருள்பட்டுப் பற்றி நிற்றல் என்னும் முதன்மைப் பொருள்கொண்டு பின் ஆதாரம் என்னும் பொருளில் வரும்.

எனவே “திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை” என்பதற்கு ஆதாரமற்றவர்களுக்குச் சர்வ வல்லமையுடைய சிவபெருமானே ஆதாரமாவார் என்பது திரண்ட பொருள்.

இனி இதைப் பல்வேறு விதமாகக் கொண்டு பல்வேறு பொருள்களும் கூறலாம்:—அவை வருமாறு.

1-வது திக்கு—அற்றவர்—கு: தாம் போகும்வழி அல்லது மார்க்கத்தினின்றும் தவறியவர்க்கு அதாவது வழிதெரியாமற் போனவர்களுக்கு, தெய்வமே துணை=சர்வேசுரனே வழிகாண்பிக்கும் நல்ல துணைவனாவன்

பொய்சொன்ன வாய்க்குப் போசனம் கிடைக்காது; பொய் புதைக்கும் உண்மையுயர்த்தும்; என்பதை யறிந்து பொய்பேசலாகாது. அதிலும் பொய்ச்சாக்ஷி சொல்லி மற்றவர்க்குத் துன்பமுண்டாக்குவது மிகக் கொடியதாகும். அவர் குலம் கூண்டோடழியும். விளையாட்டுக்கேனும் பொய் பேசலாகாதெனின், பிறரால் வஞ்சிக்கப்பட்டு நியாயம் பெறப் பாடுபடுமொருவனுக்கு மாறாக, மனமறிந்தவொன்றைத் திரவியாபேக்ஷை முதலிய காரணங்களால் இல்லதை யுள்ளதாகவும், உள்ளதை யில்லதாகவும் பொய்ச்சாக்ஷி சொல்வானாயின் அவன் வமிசம் அழியாதொழியுமோ? ஒரு பொய் கூறத் துணியாமல் அரிச்சந்திரன் என்ன பாடுபட்டான்? பொய்யாமையினும் சிறந்த அறமுண்டோ? இல்லை.

"பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"—என்பது குறள் நீதியாம்.

இக்கருத்துள்ள இந்நூலின் வேறு செய்யுள்.

பொய்க்கரி கூறினேன் போருக் கஞ்சினேன்
கைக்கொளு மடைக்கலங் கரந்து வௌவினேன்
எய்த்திடத் திடர்செய்தோ னென்றின் னோர்புகும்
மெய்க்கொடு நரகிடை விரைவின் வீழ்கயான்.

ஆகையால் எவ்வளவுக் கெவ்வளவு இத்தீய காரியத்தினின்று விலகுகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு கடவுளைச் சமீபிக்கிறோமென்பதை யறிந்து உய்யவேண்டுமென்னும் நீதி இச்செய்யுளால் அறியக் கிடக்கின்றதென்க.

(தொடரும்)

பூ. ஸ்ரீனிவாசன், தமிழ்ப்பண்டிதர்,
இராணிப்பேட்டை.

நம் சபையும் வேற்றுமையும்.

சகோதரர்களே! சபை யென்பது நமது சாஸ்திரங்களில் சொல்லியிருக்கும் முறைப்படி ஒரு பிரதான ரூபத்தைச் சூழ்வது என்று பொருள் படுகிறது. சூழ்ந்துகொள்வதென்றால் சூழப்படும் பொருள் ஒன்று இருக்க வேண்டுமல்லவா? அதற்காகவே சபாநாயகர் என்ற ஒருவரை எல்லாரும் சூழ்ந்து இருத்தல் சபையெனப் படுகிறது. இப்படிப்பட்ட சபையின் நாயகருக்கு அக்ராசனர் என்று சொல்வதுமுண்டு. அக்ராசனர் என்றால் மேலான ஆசனத்தை யுடையவர் என்று பொருள்படுகிறது. சபையில் உள்ள எல்லோரையும் விட ஒருவர் மட்டும் மேலான ஆசனத்தில் உட்காரவேண்டுமானால் அவரிடத்தில் கடவுள்தன்மை இருந்தால் ஒழிய அவர் வயதிலாவது, அந்தஸ்திலாவது, ஜாதியிலாவது பெரியவராய் இருந்தால் அவரை அக்ராசனராகக் கருதமுடியாது. சபையில் எல்லோரும் யாரை அக்ராசனராக்க ஏகமனதாய்க் கருதுகிறார்களோ, அவரே அக்ராசனராக இருக்கத் தகுந்தவர் என்று சாஸ்திரமும் அனுபவமும் இருக்கிறபடியால் அவரிடத்தில் கடவுள்தன்மை ஏற்பட்டுவிடுகிறது. இப்படிப்பட்ட கட

வுள்தன்மை வாய்ந்த அக்ராசனருக்குச் சபையில் உள்ள எல்லோரையும் சமமரியாதையாய்ப் பாவிக்கும் தன்மையிருக்கவேண்டி யிருக்கிறது. கடவுளுக்கு எல்லோரும் சரியே (எம்மதமும் சம்மதமே). சபையில் அக்ராசனர் உபன்யாசகர் இருவர் தவிர மற்றெல்லாரும் சம மரியாதையுடன் இருத்தலே சபையின் சரியான முறை. நண்பர்களே! நமது நாட்டில் மத்தியில் கொஞ்ச நாட்களுக்கு முன் சபை கூடுவது மிகவும் குறைவாக இருந்தது. இப்பொழுதும் நம்மவர்களில் அனேகருக்குச் சபையைப்பற்றிய ஏற்பாடுகள் நம்முடைய சாஸ்திரங்களில் இருக்கின்றனவென்றுகூடத் தெரியாது. சில இடங்களில் சபைகூடும்பொழுது அந்தஸ்துக்குத் தக்கபடியான ஆசனங்கள் ஏற்படுத்திக்கொள்ளுகிறார்கள். கொஞ்சம் ஏழைகளாய் இருப்பவர்களுக்கு உட்காரக்கூட இடம் கிடைக்கிறதில்லை; அதிலும் தாழ்ந்த வகுப்பினர்களுக்கு நிற்கவும் இடம் கிடையாது; ஆனால் சபைக்கு வருகிறவர்களும் பக்கமான இடத்துக்குப் போகாமல் அங்கேயெல்லாம் பெரிய மனுஷாள் உட்காருவார்கள் எனக் கருதி அனேகமாய் அவரவர்களுக்குத் தகுந்த இடங்களில் உட்கார்ந்திருந்தாலுங்கூட மத்தியில் யாராவது செல்வந்தர் வந்துவிட்டால் உட்கார்ந்திருந்தவன் எழுந்து தூரத்தில் போய் விடவேண்டி யிருக்கிறது. இப்படிப்பட்ட சபைகளைப் பார்த்த மாத்திரத்திலேயே ஏழைகளும், தாழ்ந்த வகுப்பாரும் வருவதற்குக்கூட மனம் தோன்றாமலும் வந்தாலும் தூரமாய் பயந்து ஒடுங்கி நிற்கவேண்டியதாயும் இருக்கிறது. இந்தக் கொள்கையானது நமது நூல்களின் முறைப்படி எத்தனை பாபங்களைத் தரக்கூடியது. இந்தப் பாபம் சபாநாயகர்க்கேயன்றோ? ஆனால் சபையில் உபன்யாஸம் செய்யப்பட்ட விஷயமோ எல்லோரும் சமமரியாதையாகப் பாவித்து ஒழுகவேண்டுமென்றும், வேற்றுமை, தீண்டாமை முதலானவைகள் கூடாவென்றும் பத்திரிகைகள் மூலியமாய்ப்படித்ததை வாய்ப்போக்காய் ஒப்புவித்துவிடுகிறார்கள்; எல்லோரும் சரியென்று தலையசைத்துவிடுகிறார்கள். விஷயத்தின் கருத்தைக் கவனிப்பது கிடையாது. நம் குடும்ப விஷயங்களில் ஏற்படும் விவாகாதி சுபகாரியங்களுக்குக் கூடும்சபையிலும் ஒரே இன பந்துக்களாய் இருப்பினுங்கூடச் செல்வ அந்தஸ்தின் உயர்வு தாழ்வுக்குத் தக்கபடி வேற்றுமையைப் பலவிதமாய் அனுசரிக்கிறார்கள். மேல்நாட்டார் செல்வ அந்தஸ்துக்குத் தக்கபடியாய் ஜாதி வேற்றுமையைப் பாராட்டுகிறார்கள். நம் நாட்டில் அப்படியில்லை; நம் கொள்கையே சரியானது என்று நாம் வாயில் சொல்லிக்கொள்கிறோமேயொழிய நடத்தையில் நம்மிலே செல்வத்தின் வேற்றுமை அதிகமாக இருக்கிறது. நம் நாட்டில் ஒரு செல்வவந்தன் தன் பெண்ணுக்கு விவாகம் செய்யவேண்டியதாய் இருப்பின் தன் செல்வத்துக்குத் தகுந்த செல்வமுள்ளவன் வீட்டுப் பிள்ளையைத் தேடுகிறானே யொழியத் தனக்கு நெருங்கிய சொந்தமுள்ளவன், புத்திமானும், கல்விமானும், அழகுள்ளவனுமாக இருப்பினும் செல்வந்தனாய் இல்லாவிடில் அவனைக் கவனிப்பதே கிடையாது. ஏது இல்லாவிட்டாலும் செல்வமொன்றிருந்துவிட்டால் அவனையே அங்கீகரிக்கிறான்.

குலநாசரெத்தனைபேர்! கடவுளைக் கனவிலுங் கருதாக் கயவர் எத்தனை பேர்! அந்தோ! இவர்களுக்கெந்த நரகஞ் சொந்தமோ வறியேம்! தினைத்துணைநன்றி செய்தாலும் பனைத்துணையாக் கருதவேண்டாவோ? வென்னும் நீதி விளங்குகிறது. இக்கருத்தையே பொதுமறையும்,

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என விதித்தது.

ஒளவையும் "நன்றி மறவேல்" எனச் சுருங்கச் சொற்றார். இக்கருத்தைக்கொண்ட இந்நூலிலுள்ள வேறு வாக்கியம்.

* * * * * *

"நன்றியை மறந்திடு நயமில் நாவினோர்
என்றிவர் உறும்நர கென்ன தாகவே."

(17) வஞ்சமுங் களவும் பொய்யும் மயக்கமும் மரபில் கொட்பும்
தஞ்சமென் றோரை நீக்கும் தன்மையும் களிப்புந் தாக்கும்
கஞ்சமேல் லணங்குந் தீரும் கள்ளினை லருந்தி னோரை
நஞ்சமுங் கொல்வ தல்லால் நரகினை நல்கா தன்றே. (கிஷ்-95)

(இ-ள்.) கள் குடித்தலால் வஞ்சனை, களவு, பொய், அறியாமை, துராசாரம், அடைக்கல மடைந்தோரை யகற்றுந்தன்மை, இறுமாப்பு முதலான தீக்குணங்களுண்டாகும். லக்ஷ்மிகடாக்ஷம் நீங்கும். ஆகையால் கள்ளைவிட விடமே சாலச் சிறந்தது. விஷமானது உண்டாருயிரை யொழித்தலல்லது நரகிடை யுய்க்காதாகையால் (எ-று.)

"மதுவுண்டு மயங்கி யிருந்தமையாலன்றோ ஜானகீ பதியிடங் கூறி வந்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறினேன்;" எனச் சுக்ரீவன் கள்ளுண்டவி னிழிவைக் கூறுஞ் சந்தர்ப்பத்திலுள்ளது இச்செய்யுள்.

மதுபானன்—மதியீனன். அது பஞ்சமகாபாதகத்தொன்று. அறிவுச் சுடர்கொளுத்தி அஞ்ஞான விருளகற்ற முயல்வதை விட்டு, அறிவைக் கெடுக்கும் நறவைமாந்தி, நாசமுற முயல்வ தெவ்வள வறியாமை! பிரபஞ்ச மாயையிற் கட்டுண்டலமரச் செய்யும் மயக்கத்தை மாய்க்குந் திறமையற் றல்லலுறுவதை யறியாது, மதுவின் மயக்கத்தையும் அதனுடன் சேர்த்தல் மதியீனமல்லாமல் வேறென்ன? குடி குடியைக் கெடுக்கும். குடியால் கெட்ட குடிகளெத்தனை. சரீரத்தைக் கெடுத்து அநேக வியாதிகளை யுண்டாக்கி, இம்சித்துக்கொல்லும் மதுவை, பணத்தை வீணாகச் செலவழித்து வாங்கியுண்டு திரவிய நஷ்டம், மானக்கேடு, மயக்கம், வியாதி, மரணம் முதலானவைகளை வருவித்துக்கொள்வோர், சனியனை விலைகொடுத்து வாங்குவோரின் வேறல்லர். இதுபற்றியே, "எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண்பவர்," என்றனர் தேவர். ஆகையால் சகல தீமைகளுக்கும் காரணமாயிருக்கும் கட்குடியைக் கடிதலத்தியாவசியமென்னும் நீதியை இது போதிக்கின்றது.

(18) வெங்கனல் மூழ்கியும் புலன்கள் வீக்கியும்
நுங்குவ வருந்துவ நீக்கி நோற்றவர்
எங்குளர் குலனில்வந் தில்லின் மாண்புடை
நங்கையர் மனத்தவம் நவிலற் பாலதே......(சுந்-காட்சி-72)

(இ-ள்.) நல்ல குடும்பத்திற் பிறந்து இல்லறத்திற்குரிய ஒழுக்கங்களையுடைய பதிவிரதைகள், தங்கள் மனதைப் பல விடங்களிலும் செல்லவிடாது நிறுத்தும் தபோமகிமைக்கு, வெப்பம் பொருந்திய பஞ்சாக்கினி மத்தியில் நின்றும், இந்திரிய நிக்ரகஞ் செய்தும், அன்னபானாதிகளைத் துறந்தும், செய்யப்படுகின்ற மகரிஷிகளின் தபோமகிமையும் ஈடாகாது. ஆகையால் கற்பின் பெருமை அளவிடற் கரியதே (எ-று.)

இச்செய்யுள் அசோக வனத்திற் சீதையைக் கண்ட சிறிய திருவடி (அநுமார்) அவ்வம்மையாரின் நிலையை யறிந்து, அதிசயித்து, கற்பின் மகிமையைப் புகழும் சந்தர்ப்பத்துள்ளது.

பெரும்பாலும் தவம் ஆடவர்க்கும், கற்பு பெண்டிர்க்கு முரியன. இவ்விரண்டு மனத்தை யடக்குதலாலுண்டாதலின் ஒக்குமாயினும், கற்பானது தன்னிலையிற் சிறிது தவறின் அடியோடழிந்து பெயருமின்றிப்போம். தவம் அங்ஙனமாகாது. விசுவாமித்திரர் முதலிய பல முனிவர் இதற்குத் திருட்டாந்தமாவர். பரமாதரைப் புணர்தலாகிய அகிருத்தியத்தைச் செய்தும் தவமிழக்கப் பெற்றாரில்லை. ஓர் கற்புடை மடந்தை வேறோராடவனைக் கண்டு காதல்கொள்வாளேல், அக்கணமே அவள் கற்பழியும். ஆகலின் தவத்தைக் காத்தலினும் கற்பைக் காத்தலே கடினமாமென்க. அநசூயா, தன்னைச் சோதிப்பான்போந்த முப்பெருங்கடவுளரைப் பாலராக்கிப் பாலருத்தியதும், வாசுகியார் கொங்கணவரைக் 'கொக்கென்றெண்ணினையோ?' வென்று கர்வபங்கப் படுத்தியதும், பொழுது புலர்வதற்குள் அமங்கலியாகும்படி மாண்டவியரிட்ட சாபத்தை நளாயினி இரவு கழியாதிருக்கச் செய்து தடுத்ததும், கற்பின் மகிமையாலன்றோ? ஆகையால் கற்பின் பெருமை தவத்தினும் சிறந்ததென்பது விளங்குதல் காண்க.

(19) சலந்தலைக் கொண்டன ராய தன்மையார்
அலந்திலர் செருக்களத் தஞ்சினா ரலர்
புலந்தெரி பொய்க்கரி புகலும் புன்கணோர்
குலங்களி னவிந்தனர் குரங்கி னாலென்றார்.
(சுந்-கிங்கரர்-58.)

(இ-ள்.) தமது சேனாவீரர் போர்க்குச் செல்ல நேர்ந்ததைக் குறித்து வருந்தினாரில்லை. செருக்களத்துப் பயங்கொள்ளவுமில்லை. ஆயினும், அவ்வொரு குரங்கினால் அத்தனை வீரரும், "தங்கள் மனதிற்குத் தெரிந்தவொன்றை இல்லையெனப் பொய்ச்சாட்சி புகல்வோருடைய குலமழிவது போல," அழிந்துபோயினர்; என, அசோகவனத்தை யழித்த அநுமனைக் கொல்லச்சென்ற கிங்கரர் அவனால் அழிக்கப்பட்டுத் தப்பி ஓடி வந்த சிலர் இராவணனிடம் கூறினர். (எ-று.)

187447

னதை உடையவனே! இராஜ தர்மம் என்பது நுங்கள் குலத்து உதித்த அரசர்கட்கெல்லாம் உரிமை அன்றோ? (அப்படியிருக்க அதினின்றும் நீ வழுவக் காரணம் என்னே?) ஆவியும், ஜனகன் பெற்ற அன்னமும், அமிருதத்திலிருந்து பிறந்த தேவியும் ஆகிய சீதையைப் பிரிந்ததுமுதல் உனக்கு மயக்கம் ஏற்பட்டுத் தவறின பாதையில் நடக்கின்றாய்போலும்.

(ஆவி = உயிர்)

'அவள் நினக்குமாத்திரம் ஆவியல்லள். சர்வ சராசரங்கட்கும் ஆவியாவள். ஆதலால் எனக்கும் ஆவியே. ஆவி உன்னைவிட்டுப் பிரிந்தது. ஆதலால் என்னையும் இப்போது விட்டுப் பிரிகின்றது. அவள் நின் அருகில் நிற்பின், உனக்கு நியாய அனியாயங்களின் வேற்றுமை தெற்றென விளங்கும். மேலும் அவள் தன் ஸ்வரூபமாகிய கருணையை உனக்கு ஊட்டுவள். அப்போது நீ என்னை இவ்விதம் மறைந்திருந்து அம்பு எய்யத் துணியமாட்டாய். ஆகவே நான் உய்ந்திருப்பேன்' என்ற கருத்து இதில் காணக்கிடக்கின்றது.

நவக்கிரகங்களில் சந்திரன் தலைமைத்து என்பது சோதிடநூல்களின் துணிபு. பரமசிவன் பார்வதியைப் பார்த்து, "நான் சூரியரூபி, நீ சந்திர ஸ்வரூபம்" என்றார். காலசக்கிரதசை உடுதசை முதலிய தசைகள் சந்திரன் நிற்கும் ஸ்தானத்திலிருந்தே கணிக்கப்படுகின்றன. அதாவது ஜாதகனின் ஜீவிய சரித்திரத்தின் ஆரம்ப ஸ்தானம் சந்திரன் நிற்கும் இடமே. சந்திரன் நிற்கும் இடத்தை இலக்கினமாகக் கருதுகின்றனர் என்ற விஷயமே இதற்கு ஆதாரம். இப்படிச் சூரியனைக் கருதுவார் யாருமில்லை. இதுமட்டுமல்ல; சர்வசுப பண்டிகைகளும் நக்ஷத்திரத்தை (சந்திரன் நிற்குமிடம்) அடி ஸ்தானமாக உடையன. சந்திரன் மனதில் உதிக்கும் சந்தோஷத்திற்குக் காரணமாகிறான் என்பதும் சாஸ்திர சம்மதம்.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பதற்குப் பதில் 'பிதாவும் அன்னையும் முன்னறி தெய்வம்' என்று ஏன் சொல்லக்கூடாது? நாம் முதலில் தாயை அறிகிறோம். அவள் பிறகு நமக்கு, "இவர் தந்தை" என்று கற்பிக்கிறாள். சீதா கலியாணம், வள்ளி திருமணம், ருக்மணி கலியாணம் என்ற இத்தொடக்கத்தன எல்லாம் எதைப் போதிக்கின்றன? இராமன் கலியாணம், முருகன் கலியாணம், கிருஷ்ணன் கலியாணம் என்று ஏன் கூறுவதில்லை? நாம் ஞானமடைய ஏதுவாம் வித்தையே பெண்ணின் (சரஸ்வதி) உருவமாய் நின்றது. வேதங்களின் சாராம்சமும் தனக்குத்தானே நிகரானதும், மூன்று வேளைகளிலும் தவறாமல் பிராம்மணர்களால் ஜபிக்கத்தகுந்ததுமாய காயத்ரீ மந்திரத்திற்குப் பெண்ணின் ரூபகமன்றோ பண்டைக்காலத்தவர் கற்பித்திருக்கின்றனர்.

நம் தலையங்கத்திற் பொதிந்துகிடக்கும் உண்மைக்கு இவையே போதுமென உன்னி இவ்வியாசத்தைப் பெருக்காது விடுத்தனம்.

கி. வீ.

கம்பராமாயண நீதிச்செய்யுள்.

(299-ம் பக்கத் தொடர்ச்சி.)

(16) சிதைவகல் காதற் றாயைத் தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவியந் தணரை யாவைப் பாலரைப் பாவை மாரை
வதைபுரி குநர்க்கு முண்டா மாற்றலா மாற்றல் மாயா
உதவிகொன் றார்க்கென் றேனு மொழிக்கலாமுபாயமுண்டோ.
(கிட்கி-கிட்கி-62.)

(இ-ள்.) அழியாத அன்புடைய தாயையும், தந்தையையும், குருவையும், தெய்வத்தன்மை பொருந்திய பிராமணர்களையும், பசுவையும், பாலரையும், ஸ்திரீயையும் கொன்ற பாவிகட்கேனும் அப்பாவங்களைப் பரிகரிக்கும் மார்க்கங்களுண்டாம். அழியாத உதவியை மறந்தோர்க்கு அப்பாவத்தினின்றும் நீங்கும் உபாயமுண்டோ? இல்லையே." ஆகையால் நாங்கள் நன்றி மறந்தோமில்லை. (எ-று.)

இது இராகவன் வாலியைச் சங்கரித்துச் சுக்கிரீவனுக்குப் பட்டங் கட்டியபின்னர், சுக்கிரீவன் சீதையைத் தேடுங் கயிங்கரியத்தைக் கார்காலங் கழித்துச் செய்வோமெனச் செப்பிச் சென்றவாறு வராமையின், காகுத்தன், 'அதன் காரணத்தை யறிந்துவா,' வெனத் தம்பியை யேவ, அவர் சென்று மிக்க சினத்துடன் மாருதியைக் கண்டு, "நீயும் சொன்ன சொல் மறந்தனைபோலும்" எனக் கடாவ அதற்கு அஞ்சனை தநயன் விடையிறுத்த சந்தர்ப்பத்திலுள்ளது.

இதனால், நமக்குப் பிறர் எட்டுணை நன்றி செய்தனராயினும், அதை மரணபரியந்தம் மனத்துய்த்து நன்றிபாராட்டல் வேண்டும். எக்காலத்தும் எக்காரணத்தைக்கொண்டேனும் அந்நன்றியை மறத்தலாகாது. ஒரு காலத்தி லொரு நன்றி செய்தோரே, பின்பு பல தீமைகளைச் செய்தாலும் அவ்வொரு நன்றி காரணமாக, அக்குற்றங்களைப் பொறுத்தல் பெரியோர்க்கழகாம். "ஒருநன்றி செய்தாரை யுள்ளத்தே வைத்துப்—பிழை நூறுஞ் சான்றோர் பொறுப்பர்" என்றார் செந்நாப் புலவர். தாய் தந்தை முதலானோரைக் கொன்ற பாவத்தினும் செய்ந்நன்றி கொன்ற பாவம் கொடிதெனக் கூறியிருத்தலால், அக்கொலையாலுண்டாம் பாவம் அதிகமல்லவெனக் கருதலாகாது. அன்னோர் செய்தநன்றி அளவிடுந்தரத்ததோ? 'உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்கவேண்டும்.' 'அன்னமிட்ட வீட்டிற் கன்னமிடலாகாது.' இதனை மறந்து உப்பிட்டோரை உள்ளளவும் பகைப்போரும், அன்னமிட்ட வீட்டிற் கன்னமிடப் பார்ப்போரும், உண்ட வீட்டிற் கிரண்டகம் நினைப்போரும், தன் விஷநோயை நீக்கி ரக்ஷித்த வைத்தியனைக் கொன்று பக்ஷித்த புலியைப்போல், துன்பம் போக்கி இன்பமாக்கினோர்க்கு இன்னல் விளைக்குந் துன்மார்க்கரும் எத்தனைபேர் இருக்கின்றனர்! தாயைத் தவிக்கவிடுந் தறிதலைகள் எத்தனைபேர்! தந்தையைத் தடிகொண்டடிக்கும் தடியன்கள் எத்தனைபேர்! குருவைக் குரூரமாய்ப் பேசும்

தொழிலும் நடத்தவல்லதாகும். இச்சக்தி பிரிந்திடில் அப்பொருள் அசைதற்கும் அரிது அரிது என்று வேதங்கள் முழங்காநிற்கும். ஆதலால் ஒன்பது வியூகமான புவனங்களைப் படைத்தல் காத்தல் அழித்தல் முதலாய தொழில்களை நடத்தாநின்ற, யாவரும் துதிக்கும் அவளுடைய பாதத்தை இவ்வுலகில் ஒரு தவமும் செய்யாதவர்கள் மெய்யினால் வணங்கவும் வாக்கினால் புகழவும் கூடுமோ? கூடாது.

வியூகம் = கூட்டம். அவை, (1) காலம், (2) குலம், (3) நாமம், (4) ஞானம், (5) சித்தம், (6) நாதம், (7) விந்து, (8) கலை (9) சிவம்.

பிராணன் முதல் தத்பமளவும் கால வியூகம். இதில் சூரிய சந்திராதிகள் எல்லாம் அடங்கின. இதுபோன்று நவவியூகங்களில் எல்லா உலகங்களும் அடங்கும்.

சக்தியை அன்றிச் சிவத்துக்கு ஓர் செயல் இல்லை என்றாராகலின், அவளையன்றி எவ்வகைப்பட்ட உயிர்கட்கும் ஓர் செயல் இல்லை என்பது பெறக் கிடக்கின்றது.

பாத தாமரையின் நுண்து கள்பரம
அணுவி னிற்பல இயற்றினால்
வேத நான்முகன் விதிக்க வேறுபடு
விரிதலைப் புவன மடையமால்
மூத ராவடி வெடுத் தனைத்தமுது
கண பணுடவி பரிப்பமேல்
நாத னூர்பொடி படுத்து நீறணியின்
நாமு ரைத்தெனவன் பான்மையே.

தேவியின் பாததாமரையில் பொருந்திய நுண்ணியதுகளாம் பரம அணுவைக்கொண்டு பலவகை யியற்றுக்களால் வேதநான்முகன் அகன்ற புவனங்களைப் படைக்கிறான். திருமால் அவைகளைப் பாம்பின் வடிவு கொண்டு அனேக பெரிய படக்கூட்டமாகிய அடவியால் தாங்குகின்றான். பிறகு உருத்திரன் அவற்றைப் பொடிபடுத்து விபூதியாக மெய்யில் பூசிக் கொள்ளுகின்றான். என்றால் அவள் பெருமை எவ்விதம் அடங்கும்?

இதனால் தேவியின் பாதவளியே முத்தொழில்கட்கும் காரணம் என்பது வெளிப்படை.

வேதியர்க ளயன்நாவில் விஞ்சைமக ளென்றும்
சீதரன்தன் மணிமார்பில் செழுங்கமலை என்றும்
நாதரிடத் தரிவையென்று நாட்டுவரெ ணடங்கா
ஆதிபரன் மூலபரை யாமளையுன் மயக்கால்.

அறிவிற்கு அடங்காத, ஆதிபரனுடைய பராசக்தியாகிய, யாமளையே! உன்னுடைய மாயையால், வேதியர், அயன் நாவில் கலைமகள் என்றும், திருமால் மார்பில் செழும் திருமகள் என்றும், சங்கரனின் இடைப்பாகத்தில் உமை என்றும் சொல்லர்.

'மயக்கால் நாட்டுவர்' எனவே அம்மயக்கத்தை நீக்கி ஆராய்ந்து தெளிவாராயின் உன்னை அன்றி வேறொருவரும் இல்லை என்பார் என்னும் கருத்து தொனிக்கற்பாலது.

மூவ ருக்கு முதல்பி றப்புநின்
முக்கு ணக்கட லென்றுமுன்
சேவ டிக்கண் இருப்பர் சென்னிகு
வித்த செங்கை பிரிக்கிலார்
பூவெ டுத்தவர் சென்னி வைத்திடு
போதம் உற்றவர் அம்மைநின்
கால லர்ப்பொதி தாளில் வைக்கவும்
மூவர் சென்னி களிக்குமே.

தாயே! திரிமூர்த்திகளின் முதல் பிறப்புக்குக் காரணம் நின்முக்குணமாகிய கடல் என்று நின்முன் சேவடியின்கீழ், முடிமேல் குவித்த செங்கைகளைப் பிரியாதவர்களாய் (மும்மூர்த்திகள்) இருப்பர். ஆதலால் பூவை எடுத்துத் தனித்தனி மூவர் முடிமேல் வைத்து அருச்சனை செய்யும் அறிவுடையோர், (அதைவிட்டு) வனத்தில் உள்ள அலரினால் பொதித்த நின் தாளில் பூவைத்து அருச்சனை செய்ய அம்மூவர் முடியும் இன்பமடையும்.

இதனால் உன்னைப் பூசிப்பதன்றிப் பின்னும் ஓர் தெய்வத்தைப் பூசிக்கவேண்டாம் என்பது பெற்றாம்.

'மூவர் சென்னிகளிக்கும்' என்றாராகலின், மூவராலும் நின்னாலும் (ஆக நால்வராலும்) தரப்படும் வரங்களை நின்பாதார்ச்சனை புரிவோர் பெறுவர் என ஆயிற்று.

தேவி மாணிக்கமயமாய் விளங்கும் கட்டிலின்மேல் இருக்கும்போது ஜாம்பூநதம் என்னும் பொன்னால், மும்மூர்த்திகளும் மூன்று கால்களாகத் தாங்கும்படிச் செய்த முக்கால் பீடம் எடுத்துவந்து தெய்வ மகளிர்பாதம் தாங்கவைப்பர். அதனால் 'முன் சேவடிக்கண் இருப்பர்' என்றார்.

இப்படி ஆதிசங்கரரே கூறுகின்றாராகலின் அவர் சாக்தரன்றே! என்றால் உண்மை அத்துவித நிலையை அடைவான் ஆராதித்த சங்கரரின் மூர்த்தி ஸ்வரூபம் பராசக்தியே. இராமகிருஷ்ண பரமஹம்ஸர், கம்பர், ஒட்டக்கூத்தர், காளமேகப் புலவர், காளிதாசர் முதலியோரும் இவ்வாறே செய்தனர் என்பதை அவரவர் சரித்திரங்களால் அறிக.

கம்ப இராமாயணத்தில் வாலிவதைப்படலத்தில், வாலி இராமனை விளித்துப் பின்வருமாறு கூறுகிறான் :—

கோவியல் தரும முங்கள் குலத்துதித் தோர்கட் கெல்லாம்
ஓவியத் தெழுத வொண்ணா உருவத்தா யுடைமை யன்றோ
ஆவியைச் சனகன் பெற்ற வன்னத்தை யமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னை திகைத்தனை போலும் செய்கை.

சித்திரத்திலும் எழுதிக் காட்டமுடியாத அவ்வளவு அழகிய உருவத்

யேற்றுக்கொள்ளவே மாட்டார்கள். அத்தகையோர் அப்பதவிகளில் அமராவிடின் அந்த ஸ்தலங்களுக்கு மகிமையும் மதிப்பும் குன்றி அவை சாதாரண செல்வவந்தர்களின் வீடுகள்போலவே ஆய்விடும். பிறகு மடங்கள் என்பதும், சுவாமியார் என்பதும், சீடர்கள் அங்கு போய் ஆன்மார்த்த நூல்களைக் கற்பதென்பதும் யாவும் பழங்கதையாய் மறைந்துபோய் மடங்களெல்லாம் முடங்களாகும். அதற்குமேல் ஏற்படக்கூடிய நிலைமை யெத்தகையதென்பதை யிதை வாசிப்போரே யூகித்துணரலாம்.

நமக்குள் துவேஷபுத்தியும், பொறாமையும், கட்சிபேதமும் வளர்த்துக்கொண்டு, எனக்கு இரண்டு கண்களும் போவதாயினும் சரி அண்டைவீட்டுக்காரனுக்கு ஒரு கண்ணேனும் கெடவேண்டும் என்று கோருவதுபோல் நடப்பதுதானா ஒற்றுமை யடைவதும் சீர்திருத்தம் பெறுவதும்? இதுதானா சகோதரத்வம்? இதுதானா சுய நலங்கருதாப் பெருந்தன்மை?

சிலர் நம் நாட்டில் பல ஜாதிகளிருப்பதால் எப்படி ஒற்றுமையுண்டாகும் என்கிறார்கள். இது அறியார் கூற்றேயாகும். எத்தேசத்தில்தான் இத்தகைய பிரிவினைகள் இல்லை? எங்குமேயுண்டு. மனம் மட்டும் ஒரே விஷயத்தில் நாட்டம் வைத்துவிட்டால் இச்சில்லரைப் பேதங்கள் தோன்றவேதோன்றா. தாய் நாட்டின் முன்னேற்றத்தைப் பொறுத்த விஷயத்தில் இப்பேதங்களையெல்லாம் மறக்காத வரையில் நாம் செய்யும் பிரயத்தனங்களில் எதுவுமே கைகூடாது.

தாய் நாட்டின் முன்னேற்றத்திற்கு இப்போது நாம் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்தாலன்றி நாம் தேசாபிமானம் உடையவர்களாகோம். ஒரு நாடு முன்னேற்றமடையக் கல்வியும் செல்வமும் வேண்டும். செல்வம் விவசாயம் கைத்தொழில் வர்த்தகம் இவற்றால் வருமேயன்றி அடிமைத் தொழிலாகிய சேவகா விர்த்தியால் ஒருபோதும் வராது. நம்நாட்டில் உற்பத்தியாகும் இயற்கைப் பொருள்களைக்கொண்டு நமது வாழ்க்கைக்கு வேண்டிய வஸ்துக்களை நாமே செய்துகொள்ளவேண்டும். நமது நாட்டில் உற்பத்தியான பொருள்களையே நம்மால் கூடியவரையில் உபயோகிக்க வேண்டும் என்ற அபிமானம் இருக்கவேண்டும். மேல் தளுக்கைக்கண்டு மயங்கி, நம்நாட்டுப் பொருளை விட்டு அன்னியநாட்டுப் பொருளை வாங்கி உபயோகிப்பது தேசாபிமான

மாகாது. புத்திசாலித்தனமுமாகாது. நம் நாட்டுத்துணி சற்று முரடாயிருக்கின்றதென்று கூறி, அதையணியாது அன்னிய நாட்டுத்துணியை யணிவது தன் தாய் நாட்டுப்புறத்தாள்போல் இருக்கிறாளென்று தள்ளிவிட்டு மேனிமினுக்கிக்கொண் டிருக்கும் ஒரு அன்னியமாதை என்தாய் என்று கூறுவதேயாகும்.

இந்த விஷயங்களில் அபிமானம் வைத்து நடந்துகொள்ளாவிட்டால் நாம் ஒருபோதும் தேசாபிமானமுடையோராகமாட்டோம். எத்தனை பேர் எத்தனை முயற்சிகளைச் செய்தாலும் நாம் முன்னேற்றமடைவது குதிரைக் கொம்புபோல் தான். வாயால் வீண் பிரசங்கங்கள் செய்துகொண்டும் நம் நாட்டுச் சங்கதிகளையே நம்முடைய விவகாரம் என்ற உணர்ச்சியின்றி மூன்றாவது மனிதர்போல் பேசிக்கொண்டும் இருப்பதில் ஒரு பயனுமில்லை. இது அறிவிலார் செய்கையேயாகும். ஆகையால் சகோதர சகோதரிகளே! எதிர் காலத்தில் தாய்நாட்டின் பாதுகாப்புத் தொழிலையேற்றுக்கொள்ளவேண்டிய மாணவ சகோதரர்களே! உண்மையான தேசாபிமானம் இன்னதென உணர்ந்து அதை மனதில் வைத்து நம் தாய் நாடு முன்னேற்றமடையும் வழியில் நடவுங்கள். ஆண்டவன் நமக்கு நன்மதி புகட்டி நம்மைச் சரியான உண்மைத் தேசாபிமானிகளாகச் செய்வாராக.

ஓம் தத்ஸத்.

அன்னையே அனைத்திற்கும் ஆதாரம்.

பொதுவாய் நோக்குமிடத்து நாம் இரு கடவுளர்பால் அன்பு செலுத்துகின்றோம். கடவுளை ஆணெனவும் பெண்ணெனவும் பாவித்துத் தொழுதலே ஈண்டு குறித்ததாகும். இவ்விரண்டில் எது தொன்மைத்து? அறிவாளிகள் எதைத் தேர்ந்தெடுப்பர்? ஏன்? என்பவைகளைப்பற்றியே ஈண்டு உசாவுவாம்.

சிவன் அனாதியோ, சத்தியாகிய பார்வதி அனாதியோ? என்பதே முதல் வினாவாகும். (ஈண்டு சிவன் பார்வதி என்ற சொற்கள் ஆண் கடவுள் பெண் கடவுள் என்ற வேற்றுமையையே விளக்கவந்தவை.) பிரமத்தின் தனி அவதாரமாம் ஸ்ரீ சங்கராசாரியர் இயற்றியருளிய **சவுந்தரிய இலகரி** என்னும் பொன்னேபோல் போற்றத்தகும் நூலினை, ஓர் புலவர் தமிழ்ப் பாக்களான் ஆக்கியுள்ளார். அவைகளுட் சில ஈண்டு எடுத்து எழுதுவாம்.

சிவனெனும் பொருளும் ஆதிசக் தியொடு
சேரினெத் தொழிலும் வல்லதாம்
இவள் பிரிந்திடி னியங்கு தற்குமரி
தரிதெனா மறையிரைக் குமால்
நவபெரும் புவன மூவ்வகைத் தொழில்
நடத்தி யாவரும் வழுத்துதான்
அவனி யின்கணொரு தவமி லார்பணிய
லாவதோ பரவ லாவதோ.

சிவம் என்று சொல்லப்பட்ட பொருளும் ஆதிசக்தியொடு சேரின் சத்

களும் உண்டு. ஆனால் தேசாபிமானம் என்ற விஷயத்தில் அவர்கள் கட்சி பேதங்கள், மத பேதங்கள் முதலிய ஒன்றையும் கவனியாமல் எல்லாரும் ஒற்றுமையோடு சகோதரபாவமாய் ஒன்று கூடிவிடுவார்கள்.

இனி நம் நாட்டில் தேசாபிமானம் என்ன நிலைமையி லிருக்கிறதென்பதைக் கவனிப்போம். ஆனால் அது சற்றும் கஷ்டமான காரியமல்ல. ஏனெனில் நம் தாய்நாட்டின் தற்கால நிலைமையே தேசாபிமானமென்பது நம்மிடம் மிகக் குறைவென்று அங்கை நெல்லிபோல் பிரத்தியட்சமாய்க் காட்டுகிறது. இன்னும் அனேகருக்குத் தேசாபிமானம் என்பது என்னவென்றே தெரியாது என்பது நிச்சயம். நம் நாட்டிற்குத் தீங்கையுண்டாக்கும் விஷயங்களைப் புகழ்ந்து, நாட்டிற்கு நன்மைசெய்வோரை யிகழும் அவிவேகத் துரோகிகள் அனேகர் நம் நாட்டிலுளர். இவர்களெல்லாம் பெற்ற தாய்க்குத் துரோகம் செய்யும் மாபாதகர்களாவர்.

வேறு சிலர் தாய்நாட்டிற்கு நன்மை செய்யவே பாடுபடுபவர்கள்போல் அபிநயித்து, உண்மையில் கௌரதா பட்டங்கட்கும், வருமானம், உயர்ந்த அந்தஸ்து முதலியவற்றிற்கும் ஆசை வைத்துத் தாய்நாட்டிற்குத் தீமையே இழைக்கிறார்கள். இவர்களே கோடரிக்காம்புள். இவர்களை நோக்கத் தேசத்திற்கு ஒரு நன்மையும் செய்யாமல் சும்மாவிருப்பவர்கள் மகா உத்தமர்களெனலாம். இக்கோடரிக்காம்பு போன்றவர்கள் பெரும் பாபத்திற்காளாவார்கள்.

சாதாரணமாய் நகரபரிபாலன சபைகளில் அவயவிகளாகச் செல்வோர்களில் உண்மையாகப் பொதுஜன நன்மைக்குப் பாடுபடவேண்டுமென்று மனதார எண்ணிச் செல்வோர் எத்தனைபேர்? சிலர் தங்களுக்கு வாக்களிக்கும்படி ஜனங்களை வேண்டிக்கொள்ளும்போது மட்டும் தாங்கள் ஊருக்கு எவ்வளவோ நன்மை செய்துவிடப் போவதாய்க் கூறுகிறார்கள். ஆனால் அப்பதவி கிடைத்துவிட்டால் மிக்க கௌரவம் வந்துவிட்டதாகக் கருதிவிடுகிறார்களேயன்றி, பிறகு ஜனங்களுக்குள்ள குறைகளை நீக்க எள்ளளவு முயற்சியும் செய்யாமல் சுயநல காரியங்களில் மட்டுமே கண்ணா யிருக்கிறார்கள். இத்தகையோர் தேசாபிமான முடையோரா? ஒருகாலுமில்லை.

நம் நாட்டாருக்குப் பூர்வீகமுதல் மதாபிமானமே யாவற்றி

னும் சிறந்ததாயிருப்பது யாவரு மறிந்ததே. இக்காலத்தில் அதிலேயே நம்மவர்க்குச் சிரத்தை மிகக் குறைவு. இப்போது மடங்கள், கோயில்கள் முதலிய தரும ஸ்தாபனங்களின் வருமானங்களைப் பாதைகள் போடல், பாடசாலைகள், வைத்தியசாலைகள் முதலியவைகளுக்குச் செலவு செய்யலாம் என்பதைப்பற்றிக் கொண்டுவரப்பட்ட மசோதா சட்டமாக்கப்பட ஆலோசனையிலிருக்கிறது. இதனால் நமது மதத்திற்குப் பெருந்தீங்கு நேரிடுமென்பதைப்பற்றி நாம் முன்னமே கூறியிருந்தோம். பொதுஜன அபிப்பிராயத்தை மதியாமல் இச்சட்டம் அமுலுக்கு வருமாயின் மிக்க விசனிக்கத்தக்கதே. அதிலும் இது ஹிந்துமதசம்பந்தமான தரும ஸ்தாபனங்களைமட்டுமே பாதிக்கக்கூடியதாயிருப்பது இதிலுள்ள மற்றொரு விசேஷம். ஆனால் இதற்குக் காரணம் யார்? நம்மவர்கள்தானே. மதத்தையே உயிரினும் சிறந்ததாகக் கருதும் மூதாதைகளின் வழிவந்தோர்தானே. "தன்னாலே தான் கெட்டால் அண்ணாவி என்ன செய்வான்?"

தரும ஸ்தாபனங்களின் வருமானங்களை ஒரு வகுப்பாரே அனுபவிக்கிறார்கள் என்ற காரணம் சிலர் கூறுகிறார்கள். சிலர் பிராமணர்கள் கோயில் வருமானங்களை விழுங்கி விடுகிறார்களாதலால் அவர்கள் கொட்டத்தை யடக்க இப்படிச் செய்யவேண்டியது அவசியமே யென்கிறார்கள். சிலர் மடாதிபதிகள் எல்லாம் கொழுத்துவிட்டார்கள், இப்படிச் செய்தால்தான் அவர்கள் வழிக்கு வருவார்கள் என்கிறார்கள்.

சில மடங்கள் முதலியவற்றின் வருமானங்கள் ஒழுங்கீனமான வழியில் செலவழிக்கப்படுவதும், தகுதியல்லாத காரியங்கள் நடைபெறுவதும், வீண் விரயம் செய்யப்படுவதும் உண்மையே. ஆனால் அவற்றை விலக்க வேறு வழியில்லையோ? கோபுரத்தில் பழுதிருப்பது உண்மையே. ஆனால் அதைப் பழுதுபார்க்கக் கோயிலை யிடிக்கும் காரியம்போலல்லவோ இது நடந்திருக்கிறது. இது அமுலுக்கு வரின், முன்னே, முதலாவதாக இனி மடாதீனத்திற்குக் கர்த்தராகத் தகுதியுடையவர்கள் வரமாட்டார்கள். மடாதிபதிகளாக வருவோர் பிறர்க்கு ஞானோபதேசம் செய்யத்தக்க உண்மை ஞானிகளாக விருக்கவேண்டும். அத்தகைய துறவிகளுக்கு வேந்தனும் துரும்பேயாகும். அவர்கள் இன்னொருவர்க்கு எவ்விதத்திலேனும் கட்டுப்பட்டிருக்கவேண்டிய பதவியை

காக உழைப்பவன் தன்னாலியன்றவரையில் எதையும் தியாகம் செய்யக்கூடிய உள்ளமுடையவனாக விருக்கவேண்டும். அத்தகையோனே உத்தம தேசபக்தன் எனப்படுவான். தேசாபிமானம் என்ற விஷயத்தில் நமக்குள் இருக்கும் ஜாதிமதம் முதலிய வித்தியாசங்களைச் சற்றும் கவனிக்கலாகாது. ஒவ்வொருவருக்கும் தம் தம் தாயினிடம் எவ்வாறு அன்பிருக்கிறதோ அவ்வாறே தாம் பிறந்த தேசத்தினிடம் ஒவ்வொருவருக்கும் பக்தியிருக்க வேண்டும். அவ்விஷயத்தில் எல்லாரும் ஒரு தாயின் மக்களே. அதற்கும் மற்ற அபிமானங்களுக்கும் ஒரு சம்பந்தமுமில்லை. ஒரு தாயின் புத்திரர் மூவரில் ஒருவன் சைவனாயிருக்கிறான், இன்னொருவன் கிருஸ்தவனாய்விட்டான், மூன்றாமவன் இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்துவிட்டான் என்று வைத்துக்கொள்வோம். அவர்கள் ஒருவரோடொருவர் போசனம் செய்தல் முதலிய எந்தவிஷயத்திலும் கலக்காவிடினும் மூவர்க்கும் தங்களைப்பெற்ற தாயினிடம் மட்டும் அன்பிருக்குமன்றோ! உங்கள் தாயாரை யாரோ அடிக்கிறார்கள் என்றால் உடனே மூவரும் சேர்ந்து ஓடுவார்களன்றோ! இப்படிப்பட்டதே தேசபக்தியாகும். இத்தகைய தேசாபிமானம் ஜனங்களுக்கில்லாவிடின் அந்த நாடு க்ஷேமமும் கௌரவமும் அடையாது.

திருஷ்டாந்தமாய் உலகில் முன்னேற்றமடைந்திருக்கும் நாடுகளிலெல்லாம் தேசாபிமானம் நிறைந்திருக்கக் காணலாம். 16-வது நூற்றாண்டில் ஸ்பெயின் தேசத்தார் பெருங் கூட்டமான யுத்தக்கப்பல்களைச் சேர்த்துக்கொண்டு இங்கிலாந்தின்மேல் படையெடுத்துச் சென்றார்கள். அச்சமயம் இங்கிலாந்தின் இராஜாங்கப் படைமட்டுமே அவர்களை யெதிர்த்து யுத்தம் செய்திருந்தால் ஜெயித்திராது. ஆனால் குடியானவர் முதல் சகல ஜனங்களும் தங்கள் தாய்நாட்டிற்கு ஆபத்து வந்துவிட்டதென்று கலப்பை அரிவாள் முதலிய விவசாயக் கருவிகளை யெறிந்துவிட்டுக் கத்தி, ஈட்டி முதலிய ஆயுதங்களை யேந்திக் கடற்கரையோரம் சென்று குழுமிவிட்டார்கள். இதுதான் சரியான தேசாபிமானமென்பது. இங்கிலாந்திலுள்ளவர்களெல்லாம் ஒரே ஜாதி, யொரே மதமாதலின் ஒற்றுமையாயிருக்கிறார்களென்று சிலர் கருதலாம். உண்மை யப்படியில்லை. அவர்களிலும் இங்கிலீஷ்காரர், வேல்ஸ் ஜாதியார், ஸ்காட் ஜாதியாரென்ற பிரிவுகளும், காதலிக்மதம், புரொடஸ்டான்ட் மதம் முதலிய மதபேதங்களும், பலவேறு இராஜாங்கக் கட்சி

ஆனந்தபோதினி

உருத்ரோத்காரி௵ சித்திரை௴ ௧௨

தேசாபிமானம்.

மனித சமூகத்தில் தேசாபிமானம், பாஷாபிமானம், மதாபிமானம், ஜாதியபிமானம் எனப் பலவிதமுண்டு. இவற்றில் பாஷை, மதம், ஜாதி முதலிய அபிமானங்கள் அந்தந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் வரையில் மட்டுமே யிருக்கும். தேசாபிமானமோ ஒரு தேசத்திலுள்ள எல்லா ஜாதியாருக்கும், எல்லா மதத்தினருக்கும், எப்பாஷை பேசுகிறவர்களாயினும் யாவர்க்குமே தங்கள் தாய் நாடாகிய அத்தேசத்தின்மேல் இருக்கவேண்டிய அபிமானம் அல்லது அன்பாகும். தாய்நாடு முன்னேற்றமடைந்து க்ஷேமமான நிலைமையிலிருக்கவேண்டும் என்பதில் கருத்து வைத்திருப்பதே தேசாபிமானம் என்பதாம்.

மனதில் வேரூன்றி யிருக்கும் தேசாபிமானம் செய்கையளவில் வெளிப்பட்டாலன்றி ஒரு பயனுமில்லை. உண்மையான தேசாபிமானம் செய்கையில் வெளிவராமலிராது. தேசாபிமானமுடைய ஒருவன் தன் சக்திக்கு இயன்றவரையில் தன் தாய்நாட்டின் முன்னேற்றத்திற்காக ஒரு காரியத்தையேனும் செய்யாமலிருக்கமாட்டான். ஒருவனுக்குத் தன் புத்திரன்மேல் அன்பிருக்கிறது. அது மனதில்மட்டுமா விருக்கிறது? தன் புத்திரன் க்ஷேமமாய் வாழ்வதற்கு வேண்டிய காரியங்களை யெல்லாம் சிரத்தையோடு அவன் செய்கிறானன்றோ. அவ்வாறே தன் தாய் நாட்டின் விஷயத்தில் நடந்துகொள்வதுதான் தேசாபிமானம்.

தேசக்ஷேமத்திற்காக வேலை செய்பவன் சுயநலங் கருதலாகாது. கௌரவம், அந்தஸ்து, கௌரதாபட்டம், செல்வம் முதலியவற்றைக் கோருகிறவன் பொதுநலத்தொண்டு செய்ய அருகனாகமாட்டான். இதுமட்டுமல்ல, தன் தாய்நாட்டின் க்ஷேமத்திற்

அரும்பொருள் விளக்கம்.

1. கந்துஉக மதக்கரி=கட்டுத்தறியினை முறியச்செய்யும் மதயானை.

இரதம்=பாதரசம்.

ஐந்துலோகம்=பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் ஆகிய பஞ்ச லோகங்கள்.

வேதித்து=பரிசவேதிசெய்து (பொன்னாக்கி)

"வேறொருவர் காணா துலகத்துலாவல்" என்பது-குளிகை, மை முதலியவற்றால் தன் உருவம் பிறர் கண்களுக்குப் புலப்படாவண்ணம் செய்துகொள்வது.

"மற்றொரு சரீரத்தினும் புகுதல்" என்பது-ஒரு தேகத்தை விட்டு வேறொரு தேகத்தில் நுழைதல்-இதற்குப் 'பரகாயப்பிரவேசம்' என்று பெயர்.

சிந்தையை யடக்கி=மனச்சலனத்தை யொழித்து.

"சும்மாவிருக்கின்ற திறம் அரிது"—இங்கு 'சும்மா விருத்தல்' என்றால், தற்செயலற்றுப் பூரண மௌனம் பொருந்தி யிருத்தல் என்பது பொருள்.

சித்திமுத்திகளாகிய இரண்டுபேறுகளில் முன்னே கூறப்பட்ட மதயானையை வசப்படுத்தல், கரடி புலி முதலிய துஷ்ட மிருகங்களையும் அடக்கியாளல், இரசவேதி செய்தல், உரு மறைந்திருத்தல், பரகாயப்பிரவேசம் முதலிய யாவும் அட்டமாசித்திகளிலடங்கும். ஆனால் இவை மோக்ஷத்தையளிக்கா. முத்திநெறிக்கு அவசியமான ஞானத்தை யளிக்கும் சாதனம் மனோலயமேயாகும்.

"அட்டமாசித்திகளும் அனைத்துள்ள பேறுகளும்-கட்டமாங்கதிகள் தரும் பரகதி காணக்கொடா" என்று பரமசிவம் 'தேவிகாலோத்தரம்' என்ற நூலில் கூறியிருக்கிறார். சித்திகளில் ஒன்றிரண்டு கைவந்தோரைக் கண்டால் உலகோரில் பெரும்பாலர் மயங்கிப்போய் அத்தகையோரை மகான்களென்று மதித்து மோசம் போகிறார்கள். உண்மை ஞானி சித்திகளை யிச்சியான். சித்திகளைக்காட்டி அவற்றால் உலகோர் தன்னை மதிக்கும்படி கருதமாட்டான். மனோலயமே ஞானமடைய இன்றியமையாத சாதனம். மனதை யடக்கித் தன் வயப்படுத்தலே மிக்க கஷ்ட சாத்தியமான காரியம். ஆதலின், சித்திகளை யெல்லாமடைவதைவிட மனோலயம் வாய்க்கப் பெறுதலே சிறந்ததாம் என்பது கருத்து.

2. ஏதும் திருவருளின் இச்சையாம்=எல்லாம் பகவானுடைய சங்கற்பமேயாகும்.

எப்போதும் பொருந்தும் புனிதர்பால்=எக்காலமும் அமைதியோடிருக்கின்ற, அதாவது தற்செயலற்று இருக்கின்ற பரிசுத்த உள்ளமுடையோர்களிடத்தில்.

தீதுநெறி செல்லுமோ=கெட்ட மார்க்கங்கள் சேருமோ—சேரா என்றபடி.

செல்லுமிடம் இன்பம்=அவர்கள் அடைதற்குரிய இடமானது ஆனந்தமேயாகும்.

அலால்=அப்படிக்கின்றி.

வேதத்தொனி சொல்லுமோ=வேறொன்றுண்டென்று வேதங் கூறுமோ—கூறாதென்றபடி.

[எல்லாம் பகவான் செயல்தான், நாம் எது செய்தாலும் பகவான்றான் தூண்டுகிறார் என்று கூறிக்கொண்டு தன் மனம்போனபடி நடப்பதல்ல. உண்மையில் எல்லாம் சிவச்செயல் என்று நடப்பவன் தற்செயலற்றிருக்கவேண்டும். தனக்கு வரும் சுகதுக்கம் நன்மை தீமை யாவும் பிராரப்தத்தின்படி சிவன்செயலே யாகுமென்று பொறுமையோடு சகித்துக்கொண்டிருப்பான். அவனிடத்து இச்சை யிராததலால் அவன் கர்மங்களனைத்தும் நிஷ்காம கர்மங்கள். அதனால் துர்க்கிருத்தியங்கள் முதலிய பாபச்செயல்கள் அவனிடம் நிகழா. எப்போது அகங்காரமற்றிருக்கிறானோ அவன் ஆனந்தமயமாகவே யிருப்பன்.]

3. அப்பொருள்=பரமான்மா.

ஆரணநூல்=வேதம்.

நிட்டை ஆருமிடத்து=நிட்டை பூரணமடையும்போது.

கருத்து—அஞ்ஞானதசையில் துவைதம் என்று சிவாகமங் கூறும் நிஷ்டை ஆரூடதசையில் பூரணமடையும்போது அத்துவிதமாகும்.

தாயுமானவரே "ஓதரிய துவிதமே யத்துவித ஞானத்தை யுண்டுபண்ணு ஞானமாகும்" என்றருளினர்.

அத்துவிதம் (இரண்டல்ல) என்றது—ஒன்று இரண்டு என வரையறுத்துக் கூறொணா நிலை.

"ஆங்கென்று மீங்கென்று முண்டோ—சச்சி
தானந்தசோதி யகண்ட வடிவாய்,
ஓங்கி நிறைந்தது கண்டாற்—பின்ன
ரொன்றென் றிரண்டென் றுரைத்திடலாமோ—
சங்கர சங்கர சம்போ"

என்று இம்மகானே கூறியருளியது ஈண்டு சிந்திக்கத் தக்கது.

ஒன்று எனின் முத்தியடைபவன் இல்லை. இரண்டு எனின் ஐக்கியம் கூடவில்லை. மேலும் அன்னியமாக ஒன்றிருக்கும் வரை பிறவியுண்டாகும். ஆதலின் 'ஒன்றிரண்டெனுச்சமரசநிலை' என்றனர் இச்சுவாமிகளே. இந்த நிலை அனுபவித்தறியவேண்டிய நிலை. சொல்லொணாதது நினைக்கவொண்ணாதது ஆதலின் இந்த நிலையை 'எவர்க்கார் சொல்வர்? அதுவானால் அதுவாவர் அதுவே சொல்லும்' என்று இம்மகான் 'சிதம்பர இரகசியம்' 22-வது பாசுரத்தில் கூறியருளினர்.

உ

ஓம்

பரப்பிரஹ்மணே நமஃ

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 8 } உருத்ரோத்காரி௵ சித்திரை௴ ௧௳ { பகுதி 10
1923௵ ஏப்ரல்௴ 13௳

கடவுள் வணக்கம்.

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாங்
  கரடிவெம் புலிவா யையுங்
கட்டலா மொருசிங்க முதுகின்மேற் கொள்ளலாங்
  கட்செவி யெடுத்தாட் டலாம்
வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும்
  வேதித்து விற்றுண் ணலாம்
வேறொருவர் காணாம லுலகத் துலாவலாம்
  விண்ணவரை யேவல் கொளலாம்
சந்ததமு மிளமையோ டிருக்கலா மற்றொரு
  சரீரத்தி னும்புகுத லாம்
சலமே னடக்கலாம் கனன்மே லிருக்கலாந்
  தன்னிகரில் சித்திபெற லாம்
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
  திறமரிது சத்தா கியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
  தேசோ மயானந் தமே. (1)

எதுந் திருவருளி னிச்சையா மென்றென்றெப்
போதும் பொருந்தும் புனிதர்பாற்—றீதுநெறி
செல்லுமோ செல்லாதே செல்லுமிட மின்பமலாற்
சொல்லுமோ வேதத் தொனி. (2)

அப்பொருளு மான்மாவு மாரணநூல் சொன்னபடி
தப்பில்லாச் சித்தொன்றுஞ் சாதியனு—லெப்படியுந்
தேரிற் றுவிதஞ் சிவாகமமே சொல்லுமிட்டை
யாருமிடத் தத்துவித மாம். (3)

ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய
சரித்திரமும், உபதேசங்களும்.

சில வருஷங்களுக்கு முன்னர், அறியாத பருவத்திலேயே உலகப் பற்றுக்களைத் துறந்து, அரிய அற்புதங்களை யெல்லாம் செய்து பேரின்பத்தை யடைந்த மகாத்மாவாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சரை உலகத்தில் பெரும்பான்மையும் எல்லோரு மறிவர். அன்னிய நாடுகளுக்கும் சென்று, ஆங்காங்கே, 'இந்து மதமே அழிவற்ற மதம்' என்று அனைவரும் பிரமிக்கப் பிரசங்கங்கள் புரிந்து, இந்து மதக் கொள்கைகளை யெல்லாம் ஆங்காங்குள்ள பலர் மனதிலும் புகுவித்து, அவர்களிற் பலரை இந்துமதத்தில் சேர்த்து, திக்குவிஜயஞ் செய்து வந்த ஞான சிம்ஹமாகிய ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளுக்கும் இந்த இராமகிருஷ்ணரே ஞானாசிரியர். இவருடைய அறிவைப்பற்றிய சரித்திரமோ மிகவும் அற்புதமானது. இவர் செய்த அற்புதச் செயல்கள் எத்தனையோ உண்டு. இவர் நன்றாக எழுதப் படிக்கத் தெரியாதவராயிருந்தும் உயர்ந்த ஞானமார்க்கத்தை யுணர்ந்து தாம் அனுஷ்டித்ததோடு தம் சிஷ்யர்களுக்கும் எளிதில் விளங்கும்படி தக்க உதாரணங்களோடு அதனைப் பற்பலவிதமாக உபதேசித்திருக்கின்றார். அவையெல்லாம் பக்தி, ஞானம், மோக்ஷம் முதலிய பெரிய விஷயங்களை யெல்லாம சுலபமாக விளக்கிக் காட்டக்கூடியவைகள்.

இத்தகைய மகானுடைய அற்புத சரித்திரங்களையும், நித்திய ஞானோபதேச மொழிகளையும் தமிழில் ஒரு புத்தகமாக்கி வெளியிட்டால் தமிழ் நாட்டார்க்குப் பெரிதும் பயன்படுமென்று கருதி, அன்னிய பாஷைகளிலிருந்த அவற்றை, சிறந்த வித்வான்களைக்கொண்டு மொழி பெயர்ப்பித்து, உயர்ந்த கடிதத்தில் பிழையின்றி அச்சிட்டு வெளிப்படுத்தி யிருக்கின்றோம். இப்புத்தகம் கிரௌன் 16-ல் 400-பக்கங்கள்கொண்டது பிழையின்றி அச்சிட்டு உயர்ந்த காலிகோ பைண்டும் செய்யப்பட்டிருக்கிறது.

ஈசுவரபக்தி, ஈசுவரனுக்கும் ஜீவனுக்கும் உள்ள சம்பந்தம், குருவின் தன்மை, மதத்தினியல்பு, முமுட்சுக்களின் பேதங்கள், ஈசுவரப்பிரீதி, சாதுசங்கம், வைராக்கியம், ஞானத்திற்கிடையூறுகள், பெண்ணாசை, பொன்னாசை, அகங்காரம், ஆகாரம், நிஷ்டை, ஈசுவரகிருபை, சுயாநுபூதி நிலைமை, முத்தியின் தன்மை, கோட்பாடுகள், சித்தர்லக்ஷணம், சன்னியாசியின் லட்சியங்கள், மனிதர் வகுப்பு, கிருகஸ்தர்க்குரியபோதனை, சித்திகள், கர்மவிதிகள், முதலிய அநேக அரிய விஷயங்களும், இன்னும் பல சிறந்த உபதேசங்களும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. சிறு பிள்ளைகளுங் கூட ஆத்ம ஞானத்தை மனதில் உணரும்படி உலகத்தில் நடக்கும் சாதாரண விஷயத்தையே உதாரணங் காட்டித் தெளிவாக அது சொல்லப்பட் டிருக்கின்றது. எவரும் இவ்வுபதேசங்களைச் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். ஒருவன் எளிதில் ஆத்மஞானத்தை அடைதற்கு இப்புத்தகமொன்றே போதும். இதனைப் படித்தால் இம்மை, மறுமை ஆகிய இரண்டிடத்தும் பெரிய நன்மையை அடையலாம். இது தமிழ் மக்களின் அதிஷ்ட வசத்தாலேயே இப்போது வெளிவந்துள்ளது. உலகநன்மையைக் கருதியே இக்கடுதாசிப் பஞ்சகாலத்திலும் இதனை அச்சிட்டு இதற்குக்குறைந்தவிலையே ஏற்படுத்தியிருக்கிறோம். இப்புத்தகத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய ஆப்டோன் படமும், சுவாமி விவேகாநந்தருடைய படமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இதன் விலை ரூபா 1 12 0.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30–6–'23 வரையில் ரூ. 1-8-0.

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ 6, வெங்கடேசமேஸ்திரி வீதி,
சௌகார்பேட்டை போஸ்டு, மதிராஸ்.

இந்துமாதுசிரோன்மணி விலை அணா 10

ஆனந்தபோதினி சந்தாதார்க்கு 30-6-23 வரையில் ரூபா 0-8-0

பீஷ்ம விஜயம் விலை அணா 10.

ஆனந்தபோதினி சந்தாதாரர்க்கு 30-6-23 வரையில் 0-8-0.

கீர்த்தி சிங்கன் விலை அணா 8.

ஆனந்தபோதினி சந்தாதார்க்கு 30-6-23 வரையில் ரூபா 0-6-0.

மஞ்சள் அறையின் மர்மம்

அல்லது

அபூர்வ துப்பறியும் சாமர்த்தியம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் வரையப்பட்டது

இதுகாறும் அவரால் வரையப்பட்ட அனேகம் துப்பறியும் நாவல்களையும், இதர துப்பறியும் நாவல்களையும் வாசித்திருப்போர் இத்தகைய மிக்க ஆச்சரியமும் சாமர்த்தியமுமான துப்பறியும் நாவல் இதுகாறும் எழுதப்படவில்லை யென்று எளிதில் உணர்வார்கள். இதில் குற்றம் செய்தவனுடைய சாமார்த்தியச் செயல்களும், குற்றத்தைக் கண்டு பிடிப்பவனுடைய சாமார்த்தியச் செயல்களும் ஒன்றுக்கொன்று இணையற்றனவாகவேயிருக்கும். குற்றம் நடந்த இடத்தின் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. காகித விலையால் சொல்ப பிரதிகளே அச்சிடப்பட்டன. விலை ரூ. 1—8—0

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-6-'23 வரையில் ரூ. 1-4-0.

மலையாள பகவதி.

(கும்பிட்டு விழுந்து குடுமி பறிகொடுத்தவன் கதை.)

இது, மகாவினோதமான தமிழ்க் கதை, படிக்குந்தோறும் அடங்காச் சிரிப்பை யுண்டாக்கத்தக்கது. "ஆலினமழை பொழிய இல்லம் வீழ அகத்தினன் நோய்தனில் வருந்த அடிமை சாக, மாசுரம் போகுதென் றுவிதை கொண்டோட வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளச், சாவோலை கொண்டொருவன் எதிரே செல்லத் தள்ளவொண்ணா விருந்து வரச் சர்ப்பந்தீண்டக், கோவேந்தர் பெறுத்தமது பகுதிகேட்பக் குருக்கள் வந்து தக்ஷணைக்குக் குறுக்கிட்டாரே" என்பதற்கு உதாரணமாக இதில் ஒருவனுக்கு அநேகம் வேடிக்கை இடைஞ்சல்கள் ஏற்படுவது விடாநகைப்பை யுண்டாக்கும். மலையாளபகவதி கடைசிவரை தன் இரகசியம் வெளிப்படாமலிருந்து தன சபதத்தைமுடிப்பது மிக அற்புதமாயிருக்கும். கோடாங்கிக்கூத்தும், பேயாட்ட வேடிக்கைகளும். சேவித்தவனுக்குத் தெப்பல் விழுவதும், சாஷ்டாங்க வணக்கஞ் செய்தவன் தலை மொட்டையாவதும், பிதன் கொட்டு நாடகமும் சிரிப்புமயமாகவேயிருக்கும். இது வேடிக்கையாளருக்கும் நல்ல புத்திதரக்கூடியது. இதன் விலை ரூபா. 1—0—0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

ஓர் புதிய] **அமராவதி** [நாவல்

அல்லது அதிசய மர்மங்கள்

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமிமுதலியா ரவர்களால் எழுதப்பட்டது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த ஒரு நாவல். ஒருமனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனு யிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம்பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துகளிலும் தப்பித்துக் கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவா னென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதிலுள்ள ஒவ்வொரு சம்பவமும் அதியாச்சரியத்தை விளைந்து கூடியோடு மனதைக் கவரத்தக்கதே. அசம்பாவிதமெனத் தோன்றும் அனேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். இதில்வரும் முக்கிய பாத்திரங்கள் ஒவ்வொருவருடைய சரித்திரமும் ஒவ்வொரு வியப்பான துப்பறியும் கதையைப்போன்றிருக்கும். சுருக்கிக் கூறின் இந்த நாவலை யொரு அதிசயக் களஞ்சியமே யெனலாம்.

நாவலை வாசிப்பதால் பயனடைய விரும்புவோர் இதிலிருந்து பல அரிய நீதிகளையும் புத்திமதிகளையும் நல்ல உலக அனுபவத்தையும் கிரகித்துக் கொள்ளலாகும். நாணயமான கடிதத்தில் அச்சியற்றப் பட்டது.

2-பாகமும் விலை ரூபா. 4. தபால் கூலி பிரத்தியேகம்.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-6-23 வரையில் ரூ. 3-8-0.

இந்திராபாய் அல்லது இந்திரஜாலக் கள்ளன்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்டது.

இது ஒரு துப்பறியும் நாவல்: ஆனால் அனேகம் துப்பறியும் நாவல்களை விட இதுமிக்க அபூர்வமானது. இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்கரம் என்ற கள்ளன் கல்வி, சாத்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலிய யாவும் உடையவனுதலின், அவன் தன் கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட தன் சுய உருவத்தைக் காட்டாமலே செய்யும் மிக்க அபூர்வமானவையும், கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியானவையும், முதலில் அசம்பாவிதமாகத் தோற்றத் தக்கவையுமான பல கொலை களவுகள் மிக்க அதிசயமானவைகளாகவும் இதுகாறும் கேட்டிராத விதமானவைக ளாகவுமே யிருக்கும்.

இந்திராபாய் பன்முறைகளில் அவனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணபத்தினின்று தப்புவதும், அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்கரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் அற்புத சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்கு மிக்க பிரமையை யுண்டாக்கும். துப்பறியும் நாவலில் பிரியமுடையோர் இதை வாசிக்காது விட்டால் பின்னால் அதற்காக உண்மையில் வருத்தப்படுவார்கள். உயர்ந்த க்ளேஸ் கடிதத்தில் அச்சியற்றப்பட்டது. சுமார் 530 பக்கங்கள் கொண்டது. விலை ரூபா **2—8—0.**

ஆனந்தபோதினி சந்தாதரர்களுக்கு 30-6-23 வரையில் ரூ. 2-4-0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

கமலசேகரன்

ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்கள் எழுதியது.

இது, படிப்போர் மனதையும், கேட்போர் உள்ளத்தையும் எளிதில் கவர்ந்து கொள்ளத்தக்க இனிய தமிழ்நாவல். அதிசயிக்கத்தக்க தெய்வீகச் செயல்களும், வீரச் செய்கைகளும், விநோத சம்பவங்களும் நிரம்பப் பெற்றது. கற்பு, ஊக்கம், தைரியம், விடாமுயற்சி, சுறுசுறுப்பு, சத்தியம் முதலியவற்றின் நற்பயன்களை நன்குவிளக்கிக் காட்டுவது. கள், காமம், கொலை, களவு, சூது என்னும் பஞ்சமா பாதகங்களால் விளையும் தீப்பயன்களைத் தெளிவாகத் தெரிவிப்பது. பல ஆவேசங்கள் தோன்றி நல்லோர்க்கு நன்மையும், தீயோர்க்குத் தீமையும் புரியும் செய்கைகளை ஆங்காங்கு அற்புதமாகக் காட்டக் கூடியது. இதில், கதாநாயகன், உயர்குலத்திற் பிறந்தும், தன் சிறியதந்தையின் வஞ்சகத்தால், திக்கற்றவனாகிப் பிறரால் வளர்க்கப்படுவதும், அவனுக்குத் தீயோரால் ஆபத்து நேருங்காலத்தில் அவனுடைய தாய் தந்தையரின் ஆவேசங்கள் தோன்றி அவனைக் காப்பதும், அவனுக்கு விரோதிகளால் பற்பல சமயங்களில் பிராணாபத்து நேர்ந்தும் அவன் தப்பிக்கொள்ளும் தெய்வீகச் செயல்களும், பகைவர்கள் அடிக்கடி செய்யும் தந்திரங்களை யெல்லாம் இவன் கெடுத்து விரோதிகளை ஜெயித்துத் தனக்கு நண்பரான பிரபுக்களைச் சிறைநீக்கி, ஒரே பிடிவாதமாகத் தன்னையே மணக்கவேண்டு மென்றிருந்த கன்னிகையை மணஞ்செய்வதும், இன்னும் ஆங்காங்கே நிகழும் சோப வீரசங்களும், படிப்போர் மனதைப் பிரமிக்கச் செய்துவிடும். முடிவடையப் போகும் விஷயங்கள் திடும் திடுமென வெவ்வேறு விதமாகமாறி, மேல் என்னவருமோ என்னவருமோ என்று சென்றுகொண்டே யிருக்கும்படி மனத்தை முடிவுவரை இழுத்துக்கொண்டு செல்வதில் இந்நாவல் முதன்மை பெற்றதாகும். கனம் முதலியாரவர்கள் அநேகம் அற்புதநாவல்களை யெழுதி யிருப்பினும், அவற்றி லெல்லாம், இந்நாவல் சிறந்ததென்பது இதனைப் படிப்போர்க்கு நன்கு விளங்கும். இஃதிவ்வாறு சிறந்த நாதலினாலேயே இதன்முதற் பதிப்பு விரைவிற் செலவாகி இப்போது இரண்டாம் பதிப்பு வெளிவந்திருக்கின்றது. இப்பதிப்பும் விரைவிற் செலவாகிவிடு மாதலின், புத்தகம் வேண்டுவோர் சற்றுமுன்னதே வரவழைத்துக்கொள்க. இதன் விலை ரூபா. 1—12—0.

ஆனந்தபோதினிச் சந்தாதாரருக்கு 30-6-23 வரையில் ரூ. 1—8—0

இரண்டாம்] **ஆனந்தலிங்.** [பதிப்பு.

(11-துப்பறியும் கதைகளடங்கிய கதைக் களஞ்சியம்.)

இலண்டன் சாமர்த்தியத் திருடர்கள் என்ற நாவலை வாசித்த நண்பர்களனைவரும் அதன் இனிமையை நன்குணர்ந்தே யிருப்பீர்கள். அதைப்போலவே இதிலும் பல துப்பறியும் கதைகள் அடங்கியிருக்கின்றன.

தைரியமும், துணிகரமும், மிக்க புத்தி சாமர்த்தியமும் நிறைந்த ஆனந்தலிங்கின் அதி யபூர்வச்செயல்கள் இதில் ஒரு விசேஷம். அதோடு இதில் அடங்கிய குற்றவாளிகள் நல்ல அந்தஸ்தி லுள்ளவர்களும், கல்வியறிவுடையோரு மாதலால் அவர்களுடைய மிக்க சாமர்த்தியமான இணையற்ற செய்கைகள் வாசிப்போர்க்கு மிக்க அதிசயத்தையும், பிரமிப்பையும் யோசனையையு மளிக்கும். இந்த நாவல் முழுமையும் புத்திக்கு மிக்க நன்மையளிக்கும் உணவு நிறைந்திருக்கிறது. 492-பக்கங்கள் கொண்டது.

இதன் விலை ரூபா 2—0—0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

பெரியபுராண வசனம்.

72-ஐதீகப் படங்களுடன்.

இது, சிவனடியார்களுடைய சரித்திரங்க ளெல்லாம் அடங்கியது. இதற்குத் திருத்தொண்டர் சரித்திரம் என மற்றொரு பெயருமுண்டு. சேக்கிழார் சுவாமிகளால் இயற்றப்பட்ட செய்யுள் நூலிலிருந்து பெரியோர்களால் இவ்வசன நூல் எழுதப்பட்டது. எல்லோரும் வாசிக்கத்தக்க எளிய தமிழ்நடையுள்ளது. இதில், புதுவை-ச. சுப்பராய முதலியாரவர்களியற்றிய சிறப்புப் பாயிரம், திருத்தொண்டர் புராண அட்டவணை, சேக்கிழார்சரித்திரம், சேக்கிழார் மரபுமுறைவிளக்கம், சைவசித்தாந்தா சாரிய பரம்பரை விளக்கம், திருப்பதிக் கோவை, சமயகுரவர் நால்வரின் வயசு, திருக்கைலாய சிறப்பு, மனுச்சக்ரவர்த்தி சரித்திரம், தேவாசிரிய மண்டபச்சிறப்பு, திருத்தொண்டர் குருபூஜை, சிவனடியார்களின் திருநக்ஷத்திரங்கள் முதலியவைகளும்;

சுந்தரமூர்த்தி சுவாமிகள், தில்லைவாழந்தணர், திருநீலகண்டர், இயற்பகை, இளையான்குடிமாறர், மெய்ப்பொருள் நாயனார், விறன்மிண்டர், அமர்நீதி, எறிபத்தர், ஏனாதி, கண்ணப்பர், குங்கிலியக்கலையர், மானக்கஞ்சாறர், அரிவாட்டாயர், ஆனாயநாயனார், மூர்த்திநாயனார், முருகர், உருத்திர பசுபதி, திருநாளைப்போவார், திருக்குறிப்புத் தொண்டர், சண்டேசுரர், திருநாவுக்கரசு, குலச்சிறை, பெருமிழலைக் குறும்பர், காரைக்காலம்மையார், அப்பூதி, திருநீலநக்கர், நமிநந்தியடிகள், திருஞானசம்பந்தர், ஏயர்கோன் கலிக்காமர். திருமூலர், தண்டியடிகள், மூர்க்கர், சோமாசிமாறர், சாக்கியர், சிறப்புலி, சிறுத்தொண்டர், கழறிற்றறிவார், கணநாதர், கூற்றுவர், பொய்யடிமை யில்லாத புலவர், புகழ்ச்சோழர், நரசிங்கமுனையரையர், அதிபத்தர், கலிக்கம்பர், கலியர், சத்தி, ஐயடிகள் காடவர்கோன், கணம்புல்லர், காரி, நின்றசீர் நெடுமாறர், வாயிலார், முனையடுவார், கழற்சிங்கர், இடங்கழிநாயனார், செருத்துணை, புகழ்த்துணை, கோட்புலி, பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார், முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார், முழுநீறு பூசியமுனிவர், அப்பாலு மடிச்சார்ந்தார்: பூசலார், மங்கையர்க்கரசியார், நேசநாயனார், கோச்செங்கட் சோழர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், சடையர், இசைஞானியார் ஆகிய 63 நாயன்மார்களுடைய சரித்திரங்களும்;

சமயகுரவர்களால் ஒவ்வொரு ஸ்தலங்களிலும் பாடப்பெற்ற பண்களில் முக்கிய மானவைகளும், ஒவ்வொருநாயனார் சரித்திரத் தொடக்கத்திலும் ஒவ்வொருபெரிய புராணச் செய்யுட்களும், ஒவ்வொரு சரித்திரத்தையும் அனுசரித்த ஐதீக வெத்தோ படங்களும் அடங்கியிருக்கின்றன.

இந்நூலைப்படித்து அடியார்களுடைய சரித்திரங்களைச் செவ்வனே யுணர்வதால், தெய்வபக்தி, அடியார்பக்தி, குருபக்தி, தாய்தந்தையர் பக்தி, பெரியோர்பக்தி முதலியவைக ளுண்டாகும். பற்பல நீதிகளும், தர்மங்களும் மனதிருப்தியும்; மோக்ஷமார்க்கமும் கைகூடும். இம்மை மறுமைப்பயன்களும் சித்திக்கும். இக்காலத்தில், அன்னிய பாஷாபிமான விபரீதமெனட்டிகத்தால், சுத்தசைவகுலத்தி லுதித்தாருள்ளுங்கூடப் பெரும்பான்மையோர் தங்கட்குரிய சிவனடியார் சரித்திரங்களைத் தெரிந்து கொள்ளாம லிருக்கிறார்கள். ஆதலின், அத்தகையினர்க்கும், மற்ற அன்னிய மதத்தினருக்கும் படித்த வித்வான்களுக்கும், படிப்பில்லா தவர்கட்கும் அடியார் சரித்திரங்களைத் தெரிந்து கொள்ளும் விஷயத்தில் இது பெரிதும்பயன்படும். வசன நூலா யிருப்பதால் சகலரும் படித்து எளிதில் அடியார் சரித்திரங்களையும், மற்ற நீதிகளையும் அறியலாம். இது சுத்தமாக அச்சிடப்பட்டு அழகிய காலிகோ பைண்டும் செய்யப்பட் டிருக்கிறது. இதன் விலை ரூபா 2—8—0.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு ரூ. 2—4—0.

கடந்த வருடங்களைக் காட்டிலும் இவ்வருடப் பஞ்சாங்கத்தில் அனேக சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

உருத்ரோத்காரி வருஷத்திய

(நேத்திர ஜீவநக்ஷத்திராதி சாந்திர ஸௌரமான)

சர்வமுகூர்த்த

"ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கம்"

வருடா வருடம் அனேக சந்தாநேயர்கள் வேண்டிக்கொண்டபடி நமது வானசாத்திரக் கணிதத்திலும், ஆங்கில வானசாத்திர கணிதத்திலும் பூரணத்திறமை வாய்ந்த ஸ்ரீமான் C. G. இராஜன் பி. ஏ. அவர்களால் (B. A. Mathematics) இப்பஞ்சாங்கம் மிக்க ஜாக்கிரதையோடு கணிக்கப்பட்டது.

சிறுவர்களும், ஸ்திரீகளும் சுலபமாக அறிந்து கொள்ளும்படி திதி நக்ஷத்திரங்களின் நாழிகையோடு, மணி நிமிஷமும் பக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. இதில் பஞ்சாங்கத்தில் இருக்க வேண்டிய, நேத்திரம், ஜீவன், அமிர்தாதி யோகங்கள், விவாக சக்கிரம், அகஸ் இராசியிருப்பு, விரதாதி விசேஷங்கள், தசா புத்தி, கிரக சாரங்கள், தசவிதப்பொருத்தங்கள், சகுனங்கள் முதலியவைகளோடு, நவ நாயகர்கள் பலன், முதலிய வேறு விஷயங்களும் சேர்க்கப்பட்டு சோதிடர்களும் மற்றவர்களும் எளிதில் அறிந்து கொள்ளும்படி சோதிட பொது விஷயங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. பஞ்சாங்கம் 1-க்கு விலை அணா 2.

6-பஞ்சாங்கங்கள் 0—9—0. 12-பஞ்சாங்கங்கள் 1—0—0.

தபால் கூலி பிரத்தியேகம்.

தனி பஞ்சாகம் வேண்டுவோர் விலையோடு தபால்கூலி ½ அணா சேர்த்து தபால் பில்லைகளனுப்பவும்.

25 பஞ்சாங்கங்கள் வேண்டுவோர் ரூ. 1—12—0 முந்தி அனுப்பிவிட்டு தங்களுக்கு சமீபமான இரயில்வேஸ்டேஷன் தெரிவித்தால் பார்சலாக அனுப்பிவிடுவோம். இரயில் சார்ஜ் நீங்கள் கொடுத்து பெற்றுக்கொள்ளவேண்டும்.

வியாபாரிகளுக்கு "இங்கு ஆனந்தபோதினி பஞ்சாங்கம் விற்கப்படும்" என்று பெரிய எழுத்தில் போர்டும் அனுப்பப்படும்.

போனவருடம் நமது பஞ்சாங்கத்தைப் பார்த்து ஒருவர் அச்சியற்றிவிற்று அபராதமடைந்த விஷயம் நமது ஆவணிமாத சஞ்சிகையில் வெளியிட்டிருக்கிறோம். ஆகையால் நமது பஞ்சாங்கம் வாங்குவோர் பெயர் முதலியவற்றையும் முக்கியமாய் "ஆனந்தபோதினி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது" என்பதையும் கவனமாகப் பார்த்து வாங்கும்படி எச்சரிக்கை செய்கிறோம்.

☞ எமது பஞ்சாங்கம் எல்லா ஊர் புத்தக வியாபாரிகளிடத்திலும் எல்லா ரேயில்வே (Higginbotham) புக்ஸ் [illegible] கிடைக்கும் வர்த்தகர்களுக்குத் தக்க [illegible] அளிக்கப்படும்.

ஆனந்தபோதினி [illegible], சௌகார்பேட்டை மதராஸ்.

சந்தா விவரம்.

வருடம் 1-க்கு தாபற்கூலி யுள்பட	இந்தியா, பர்மா, ஸிலோன்	...
	பினங், ஸிங்கபூர், தென்ஆப்ரிகா, பசரா, மெசபொடோமியா முதலிய வெளி நாடுகளுக்கு	

கடந்துகொண்டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை

சென்ற வருடங்களுடைய தனிச் சஞ்சிகை விலை 0-

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

---

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் பூரணமாய்ப் பெயரை எழுதியனுப்பவேண்டும்.

(2) சந்தா தொகையை முன்னடி செலுத்தியாவது அல்லது வி. பி. யில் பணம் கட்டியாவது பெற்றுக்கொள்ளவேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடிமாத முதல்தான் கணக்கு வைக்கப்பட்டு ஆடிமாத சஞ்சிகை முதல், சேர்த்தனுப்பப்படும்.

☞ (3) சஞ்சிகை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ் 2-அணா வோடு (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரையில் 2-அணா வாகையால்) வி. பி. கமிஷன் 2-அணா வி. பி. க்கு தபால் சார்ஜ் 0-0-6 ஆக 0-4-6 அதாவது 5-அணா சேர்த்து ரூபா 1-5-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினால் 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம், இதைக் கவனிக்கவும்.

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம்மாதம் 15-ம்தேதிவரையில் பார்த்து அதற்குமேல் அதே தமிழ் மாதமுடிவிற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகுதெரிவிப்போர் கிரையமனுப்பிப் பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப்புது விலாசத்திற்கு வந்து சேரும்வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்[illegible] கொண்டு நமக்குப் புதுவிலாசத்தை யறிவிக்கவேண்டும் இன்றே[illegible] அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடு[illegible] அதற்கு நாம்பொறுப்பாளி யல்ல.

(6) சந்தா நம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்க[illegible]படமாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நா[illegible] பொறுப்பாளி யல்ல. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபா[illegible] பில்லையாவது அனுப்பினாலன்றி விடையளிக்கப்பட மாட்டாது.

Life Subscription ஜீவிய சந்தா	இந்தியா, பர்மா, சிலோன்	ரூபா	15—0-
	அன்னிய நாடுகளுக்கு	,,	20—0

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு	ஒரு மாதத்திற்கு	...
அரைப் பக்கத்திற்கு	,,	...
கால் பக்கத்திற்கு	,,	..

எப்போதும் முழுத்தொகையும் முன் பணம்

நா. முனிசாமி முதலியார் "ஆனந்த[illegible]

6. வெங்கடேச [illegible] தெரு, சௌகா[illegible]

கடந்த
கத்தில்

ஆனந்த போதினி

ANANDA BODHINI.

Vol. 8. பொருளடக்கம். No. 10

5 - JUN.

பக்கம்.

1. கடவுள் வணக்கம் ... 361
2. அரும்பொருள் விளக்கம் ... 362
3. தேசாபிமானம் ... 364
4. அன்னையே அனைத்திற்கும் ஆதாரம் 369
5. கம்பராமாயண நீதிச்செய்யுள் ... 373
6. நம் சபையும் வேற்றுமையும் ... [illegible]
7. திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை 378
8. சோதிட சாஸ்திரமும் புகைரத விபத்தும் ... 381
9. பணவிஷயமும் பெண் மாணவிகளும் ... 383
10. பகவத்கீதை வசனம் ... 385
11. துறவு—யோகம் ... 390
12. பெண்கள் பக்கம் ... 392
13. சந்தாநேயர்களுக்கு ஓர் அறிக்கை 393
14. நவீன நாகரீகதடபுடல் ... 394
15. தபால் கொள்ளைக்காரர்கள் ... 395
16. பொது சமாசாரம் ... 399
17. பஞ்சாங்கம் ... 400
18. விளம்பரங்கள்

ளிடத்தில்

ஆனந்த